भारत का राजपत्र

# The Gazette of India

# இந்திய அரசிதழ்

असाधारण

**EXTRAORDINARY**

**சிறப்பிதழ்**

भाग XV अनुभाग 1

**Part XV Section 1**

*பகுதி XV பிரிவு 1*

प्राधिकार प्राकारित

**PUBLISHED BY AUTHORITY**

**அதிகாரத்துடன் வெளியிடப்பட்டது**

नई दिल्ली, गुरुवार, 30 मार्च, 2006/1928 सका

New Delhi, Thursday, 30th March 2006/1928 Saka

*புது தில்லி, வியாழக்கிழமை, 30 மார்ச் 2006/1928 சக*


**Ministry of Law, Justice and Company Affairs**
**(Legislative Department)**
**New Delhi**

**சட்ட, நீதி மற்றும் நிறும அலுவல்கள் அமைச்சகம்**
**(சட்டமியற்றுத் துறை),**
**புது தில்லி**

The Translation in Tamil of the Right to Information Act, 2005 (22 of 2005) and the National Highways Authority of India 1988 (68 of 1988) are hereby published under the Authority of the President and shall be deemed to be the Authoritative Texts thereof in Tamil under clause (a) of section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 1973 (50 of 1973).

2005ஆம் ஆண்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம் (22/2005), 1988 ஆம் ஆண்டு இந்திய தேசிய நெடுஞ்சாலைகள் ஆணைய அமைப்புச் சட்டம் (68/1988) ஆகியவற்றின் தமிழ் மொழிபெயர்ப்பு. குடியரசுத் தலைவரின் அதிகாரத்தின்படி இதன் மூலம் வெளியிடப்படுகின்றன. 1973ஆம் ஆண்டு அதிகாரவுரிமைப்படியான வாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டத்தின் (50/1973) 2ஆம் பிரிவின் (அ) கூறின்படி இவையே தமிழில் அதிகாரவுரிமைப்படியான வாசகங்களாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

[விலை: ரூ. 34.

# 2005 ஆம் ஆண்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம்

## (சட்ட எண் 22/2005)

பொது அதிகாரஅமைப்பு ஒவ்வொன்றின் செயற்பாட்டில் வெளிப்படையான தன்மையையும், பொறுப்புடைமையும் மேம்படுத்தும் பொருட்டும், பொது அதிகார அமைப்புகளின் கட்டாள்கையில் உள்ள தகவலைப் பெறுவதற்காகவும், குடிமக்களுக்குத் தகவல் பெறும் உரிமை குறித்து நடப்பிலிருக்கும் முறையை எடுத்துரைப்பதற்கும், ஒரு மையத் தகவல் ஆணையத்தையும், மாநிலத் தகவல் ஆணையங்களையும் அமைத்துருவாக்குவதற்கும், அதனுடன் தொடர்புடைய அல்லது அதற்குச்சார்வுறுவான பொருட்பாடுகளுக்கும் வகைசெய்வதற்கானதொரு சட்டம்.

இந்திய அரசமைப்பு மக்களாட்சிக் குடியரசை ஏற்படுத்தியிருப்பதாலும்;

மற்றும் மக்களாட்சி, தன்னுடைய செயற்பாட்டிற்கு, ஊழலைத் தடுத்து நிறுத்துவதற்கும், அரசாங்கங்களும், அதன் துணைமை அமைப்புகளும், ஆளப்படுபவர்களுக்கு பொறுப்புடைமையைக் கொண்டிருப்பதற்கு இன்றியமையாததாக உள்ள தகவலறிந்த குடிமக்களுக்கு, தகவலின் வெளிப்படையான தன்மையையும் வேண்டுறுத்துவதாலும்;

மற்றும் வழக்கமான நடைமுறையில் தகவலை வெளியிடுவதானது, அரசாங்கங்களின் திறம்பட்ட செயற்பாடுகள், வரம்பிற்குட்பட்ட நிதிவள வாயில்களின் பெருமளவு பயன்பாடு, நுட்பமான தகவலின் மந்தணத்தன்மையைப் பாதுகாத்தல் உள்ளடங்கலான, பிற பொது நலன்களுடன் முரண்படக்கூடியதாக இருப்பதாலும்;

மற்றும் முரண்படும் இந்த நலன்களுக்கிடையேயும் குடியரசினுடைய குறிக்கோளின் மேதகவினைப் பாதுகாப்பது தேவையாக இருப்பதாலும்;

தற்போது, அதற்காக, குடிமக்கள் பெற விரும்புகிற குறித்தசில தகவலை அளிப்பதற்கு வகைசெய்வது உகந்ததாகயிருக்கிறது என்பதாலும்;

இந்தியக் குடியரசின் ஐம்பத்து ஆறாம் ஆண்டில் நாடாளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

## அத்தியாயம் I

### முன்னுரை

குறுந்தலைப்பு, அளாவுகை மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2005 ஆம் ஆண்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், என்று வழங்கப்பெறும்.

(2) இது, ஜம்மு-காஷ்மீர் மாநிலம் நீங்கலாக, இந்தியா முழுவதையும் அளாவி நிற்கும்.

(3). 4ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவும் 5ஆம் பிரிவின் (1) ஆம் மற்றும் (2) ஆம் உட்பிரிவுகளும், 12,13,15,16,24,27,28 ஆகிய பிரிவுகளின் வகைமுறைகளும், உடனடியாக செல்லாற்றல் பெறும், மற்றும் இந்தச் சட்டத்தின் எஞ்சிய வகைமுறைகள் அது இயற்றப்பட்ட நூற்று இருபதாவது நாளில் செல்லாற்றல் பெறும்.

பொருள் வரையறைகள்.

2. இந்தச் சட்டத்தில் தறுவாயின் தேவை வேறானாலன்றி,—

(அ) "உரிய அரசாங்கம்" என்பது,—

(i) மைய அரசாங்கத்தால் அல்லது ஒன்றியத்து ஆட்சிநிலவரை நிருவாகத்தால் நிறுவப்பட்டு, அமைத்துருவாக்கப்பட்டு, சொந்தமாகக் கொண்டிருக்கப்பட்டு, கட்டாள்கை செய்யப்பட்டு அல்லது நேரடியாகவோ, மறைமுகமாகவோ அளிக்கப்பட்ட நிதியங்களால் பெருமளவுக்கு நிதியுதவி அளிக்கப்படுகிற ஒரு பொது அதிகாரஅமைப்பு தொடர்பாக, மைய அரசாங்கம் என்றும்,

(ii) மாநில அரசாங்கத்தால், நிறுவப்பட்டு, அமைத்துருவாக்கப்பட்டு, சொந்தமாகக் கொண்டிருக்கப்பட்டு,

கட்டாள்கை செய்யப்பட்டு அல்லது நேரடியாகவோ மறைமுகமாகவோ அளிக்கப்பட்ட நிதியங்களால் பெருமளவுக்கு நிதியுதவி அளிக்கப்படுகிற ஒரு பொது அதிகார அமைப்பு தொடர்பாக, மாநில அரசாங்கம் என்றும்

பொருள்படும்;

(ஆ) "மையத் தகவல் ஆணையம்" என்பது, 12ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி அமைத்துருவாக்கப்பட்ட மையத் தகவல் ஆணையம் என்று பொருள்படும்;

(இ) "மையப் பொதுத் தகவல் அலுவலர்" என்பது, 5ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி பதவிப்பெயர் குறிக்கப்பட்ட மையப் பொதுத் தகவல் அலுவலர் என்று பொருள்படும், மற்றும் அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்படி அவ்வாறு பதவிப்பெயர் குறிக்கப்பட்ட ஒரு மையப் பொதுத் தகவல் உதவி அலுவலரையும் உள்ளடக்கும்;

(ஈ) "தலைமைத் தகவல் ஆணையர்" மற்றும் "தகவல் ஆணையர்" என்பது, 12ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்படி அமர்த்தப்பட்ட, தலைமைத் தகவல் ஆணையர் மற்றும் தகவல் ஆணையர் என்று பொருள்படும்;

(உ) "தகுதிறமுள்ள அதிகாரஅமைப்பு" என்பது,—

(i) மக்களவையைப் பொறுத்தவரை, மக்களவைத் தலைவர் என்றும் ஒரு மாநிலச் சட்டமன்றப் பேரவையைப் பொறுத்தவரை அல்லது அத்தகையப் பேரவையைக் கொண்டுள்ள ஒன்றியத்து ஆட்சி நிலவரையைப் பொறுத்தவரை, சட்டமன்றப் பேரவைத் தலைவர் என்றும், மாநிலங்கள் மேலவை அல்லது மாநிலச் சட்டமன்ற மேலவையைப் பொறுத்தவரை, தலைவர் என்றும்,

(ii) உச்ச நீதிமன்றத்தைப் பொறுத்தவரை இந்தியத் தலைமை நீதிபதி என்றும்,

(iii) உயர் நீதிமன்றத்தைப் பொறுத்தவரை உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி என்றும்,

(iv) அரசமைப்பினாலோ அல்லது அதன் வழியாலோ நிறுவப்பட்ட அல்லது அமைத்துருவாக்கப்பட்ட பிற அதிகாரஅமைப்புகளைப் பொறுத்தவரை குடியரசுத் தலைவர் அல்லது நேர்வுக்கேற்ப, ஆளுநர் என்றும்,

(v) அரசமைப்பின் 239ஆம் உறுப்பின்படி அமர்த்தப்பட்ட ஆளுகையர் என்றும்

பொருள்படும்;

(ஊ) "தகவல்" என்பது, மின்னணுப்படிவம் எதிலும் வைத்து வரப்படும் பதிவுருக்கள், ஆவணங்கள், குறிப்பாணைகள், மின்னணு அஞ்சல்கள், கருத்துரைகள், அறிவுரைகள், செய்திக்குறிப்புகள், சுற்றறிக்கைகள், ஆணைகள், பயணக் குறிப்பேடுகள், ஒப்பந்தங்கள், அறிக்கைகள், தாள் ஆவணங்கள், மாதிரிகள், மாதிரி உருவங்கள், புள்ளிவிவரக் குறிப்புகள் உள்ளடங்கலாக, எந்த வடிவத்திலும் உள்ள பொருள் எதுவும் என்று பொருள்படும், மற்றும் அப்போதைக்குச் செல்லாற்றலில் உள்ள பிற சட்டம் எதன்படியும் ஒரு பொது அதிகார அமைப்பினால் பெறக்கூடிய ஏதேனும் தனியார் குழுமம் தொடர்பான தகவல் எதுவும் என்றும் பொருள்படும்.

(எ) "வகுத்துரைக்கப்பட்ட" என்பது, உரிய அரசாங்கத்தினால் அல்லது, நேர்வுக்கேற்ப, தகுதிறமுள்ள அதிகாரஅமைப்பினால் இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதிகளினால் வகுத்துரைக்கப்பட்ட என்று பொருள்படும்;

(ஏ) "பொது அதிகாரஅமைப்பு" என்பது,—

(அ) அரசமைப்பினாலோ அல்லது அதன் வழியாலோ,

(ஆ) நாடாளுமன்றத்தினால் செய்யப்பட்ட பிற சட்டம் எதனாலுமோ,

(இ) மாநிலச் சட்டமன்றத்தினால் செய்யப்பட்ட பிற சட்டம் எதனாலுமோ,

(ஈ) உரிய அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட அறிவிக்கையினாலோ அல்லது பிறப்பிக்கப்பட்ட ஆணையினாலோ

நிறுவப்பட்ட அல்லது அமைத்துருவாக்கப்பட்ட அதிகாரஅமைப்பு அல்லது குழுமம் அல்லது தன்னாட்சி நிறுவனம் என்று பொருள்படும்; மற்றும் உரிய அரசாங்கத்தால்,—

(i) சொந்தமாகக் கொண்டிருக்கப்பட்ட, கட்டாள்கை செய்யப்பட்ட அல்லது நேரடியாகவோ, மறைமுகமாகவோ பெருமளவில் நிதியுதவி அளிக்கப்படும் குழுமம் எதனையும்,

(ii) நேரடியாகவோ, மறைமுகமாகவோ நிதியுதவியளிக்கப்படும் அரசுசாரா அமைப்புகளையும்

உள்ளடக்கும்;

(ஐ) "பதிவுரு" என்பது,—

(அ) ஆவணம், கையெழுத்துப்படி மற்றும் கோப்பு எதனையும்,

(ஆ) ஓர் ஆவணத்தின் நுண்படச்சுருள், நுண்படச்சுருள் துண்டு மற்றும் ஓர் உருவ நேர்படி எதனையும்,

(இ) பெரிதுபடுத்தப்பட்டு அல்லது பெரிதுபடுத்தப்படாமல் அத்தகைய நுண்படச்சுருளில் பதிக்கப்பட்ட உருவம் அல்லது உருவங்களின் மறு படி எடுப்பு எதனையும், மற்றும்

(ஈ) ஒரு கணினியால் அல்லது பிற சாதனம் எதனாலும் ஆக்கப்பட்ட பிற பொருள் எதனையும்

உள்ளடக்கும்;

(ஒ) "தகவல் பெறும் உரிமை" என்பது, பொது அதிகாரஅமைப்பு எதனாலும் அல்லது அதன் கட்டாள்கையின்கீழ் வைத்து வரப்படுவதும், இந்தச் சட்டத்தின்படி பெறக்கூடியதுமான தகவல் குறித்த உரிமை என்று பொருள்படும், மற்றும்

(i) பணியினை, ஆவணங்களை, பதிவுருக்களை பார்வையிடுவதற்கான,

(ii) ஆவணங்கள் அல்லது பதிவுருக்களின் குறிப்புகளை, எடுகுறிப்புகளை அல்லது உறுதிச்சான்றளிக்கப்பட்ட படிகளை எடுப்பதற்கான,

(iii) பொருளின் உறுதிச்சான்றளிக்கப்பட்ட மாதிரிகளை எடுப்பதற்கான,

(iv) கணினி ஒன்றில் அல்லது பிற சாதனம் எதிலும் தகவல் சேகரித்து வைக்கப்பட்டுள்ளவிடத்து, குறுந்தட்டுகள், நெகிழ் ஒளித்தட்டுகள், நாடாக்கள், காணொலிச்சுருள் பேழைகள் வடிவத்தில் அல்லது பிற மின்னணுப்பதிவுமுறை எதிலும் அல்லது இவற்றின் அச்சுப்படிகளை எடுப்பதன் மூலமாக தகவல் பெறுவதற்கான

உரிமையையும் உள்ளடக்கும்;

(ஓ) "மாநிலத் தகவல் ஆணையம்" என்பது, 15.ஆம் பிரிவின் (1).ஆம் உட்பிரிவின்படி அமைத்துருவாக்கப்பட்ட மாநிலத் தகவல் ஆணையம் என்று பொருள்படும்;

(ஔ) "மாநிலத் தலைமைத் தகவல் ஆணையர்" மற்றும் "மாநிலத் தகவல் ஆணையர்" என்பது, 15.ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்படி அமர்த்தப்பட்ட மாநிலத் தலைமைத் தகவல் ஆணையர் மற்றும் மாநிலத் தகவல் ஆணையர் என்று பொருள்படும்;

(க) "மாநிலப் பொதுத் தகவல் அலுவலர்" என்பது, 5.ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி பதவிப்பெயர் குறிக்கப்பட்ட மாநிலப் பொதுத் தகவல் அலுவலர் என்று பொருள்படும்; மற்றும் அப்பிரிவின் (2).ஆம் உட்பிரிவின்படி, அவ்வாறு பதவிப்பெயர் குறிக்கப்பட்ட ஒரு மாநிலப் பொதுத் தகவல் உதவி அலுவலரையும் உள்ளடக்கும்.

(ங) "மூன்றாம் தரப்பினர்" என்பது, தகவல் பெறுவதற்காகக் கோரிக்கை செய்கிற குடிமகன் அல்லாத ஒரு நபர் என்று பொருள்படும்; மற்றும் ஒரு பொது அதிகாரஅமைப்பினை உள்ளடக்கும்.

## அத்தியாயம் II

## தகவல் பெறும் உரிமையும், பொது அதிகார அமைப்புகளின் கடமைப் பொறுப்புகளும்.

தகவல் பெறும் உரிமை.

3. இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு உட்பட்டு, அனைத்து குடிமக்களும் தகவல் பெறும் உரிமை உடையவர் ஆவர்.

பொது அதிகார அமைப்புகளின் கடமைப் பொறுப்புகள்.

4. (1) பொது அதிகாரஅமைப்பு ஒவ்வொன்றும்,—

(அ) இந்தச் சட்டத்தின்படி தகவல் பெறுவதற்கான உரிமையை எளிதாக்குவதற்கு எந்த முறை பயன்படக்கூடுமோ அந்த முறையிலும், படிவத்திலும் உரியவாறு பட்டியல் வரிசைத் தொகுப்பிலிட்டும், அகரவரிசைத் தொகுப்பில் அட்டவணைப்படுத்தியும், அதன் பதிவுருக்கள் அனைத்தையும் வைத்து வருதல் வேண்டும்; மற்றும் கணினிமயமாக்கப்படுவதற்கு உரியதான பதிவுருக்கள் அனைத்தையும் நியாயமான காலத்திற்குள்ளும், அவற்றின் மூலப்படிவங்கள் கிடைக்கக்கூடியவனவாக இருப்பதற்கு உட்பட்டும், அத்தகைய பதிவுருக்களை எளிதாகப் பெறும் பொருட்டு, பல்வேறுபட்ட அமைப்புகளின் மூலமாக, நாடு முழுவதும் கணினிமயமாக்கப்படுவதையும், வலைப்பின்னல் மூலம் தொடர்புபடுத்தப்படுவதையும் உறுதி செய்து கொள்ளுதல் வேண்டும்;

(ஆ) இந்தச் சட்டம் இயற்றப்பட்டதிலிருந்து நூற்று இருபது நாட்களுக்குள், பின்வருவனவற்றை வெளியிடுதல் வேண்டும் மற்றும் ஒவ்வோர் ஆண்டும் இந்த வெளியீடுகள், நாளது தேதி வரையிலானவையாக மாற்றப்படுதல் வேண்டும்:—

(i) அதன் அமைப்பு, அதன் செயற்பணிகள் மற்றும் கடமை குறித்த விவரங்கள்;

(ii) அதன் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் அதிகாரங்கள் மற்றும் கடமைகள்;

(iii) கண்காணிப்பு மற்றும் பதிலளிக்கும் பொறுப்பின் வழிவகைகள் உள்ளடங்கலாக, முடிவெடுக்கும் முறைகளில் பின்பற்றப்படவேண்டிய நடைமுறை;

(iv) அதன் செயற்பணிகளை ஆற்றுவதற்காக அதனால் விதிக்கப்பட்ட நெறிமுறைகள்;

(v) பொது அதிகார அமைப்பினால் வைத்துவரப்படும் அல்லது அதன் கட்டாள்கையின் கீழுள்ள அல்லது அதன் செயற்பணிகளை ஆற்றுவதற்காக அதன் பணியாளர்களால் பயன்படுத்தப்படும் விதிகள், ஒழுங்குமுறைவிதிகள், ஏவுரைகள், கையேடுகள் மற்றும் பதிவுருக்கள்;

(vi) பொது அதிகார அமைப்பால் வைத்து வரப்படும் அல்லது அதன் கட்டாள்கையில் உள்ள ஆவணங்களின் வகைகள் பற்றிய ஒரு விவரவுரை;

(vii) அதன் கொள்கையினை வகுத்தமைப்பது அல்லது அதனைச் செயற்படுத்துவது தொடர்பாக பொதுமக்களுடன் கலந்தாலோசிப்பதற்காக அல்லது பொதுமக்களால் சார்பாற்றம் செய்யப்படுவதற்காக இருந்து வருகிற ஏதேனும் ஏற்பாடு பற்றிய விவரங்கள்;

(viii) வாரியங்கள், மன்றங்கள், குழுக்கள் மற்றும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டவர்களைக் கொண்டு பொது அதிகார அமைப்பின் பகுதியாக அமைத்துருவாக்கப்பட்ட பிற குழுமங்களின் விவர அறிக்கை அல்லது அதன் ஆலோசனை நோக்கத்திற்காகவும், இந்த வாரியங்கள், மன்றங்கள், குழுக்கள், பிற குழுமங்கள் ஆகியவற்றின் கூட்டங்கள், பொதுமக்கள் வரக்கூடியதாக உள்ளதா அல்லது கூட்டங்களின் நடவடிக்கைக் குறிப்புகள் பொதுமக்களுக்குக் கிடைக்கக்கூடியதாக உள்ளதா என்பது;

(ix) அதன் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் பற்றிய தகவல் தொகுப்பு;

(x) பொது அதிகாரஅமைப்பின் ஒழுங்குமுறை விதிகளில் வகை செய்யப்பட்டவாறான இழப்பீட்டு முறை உள்ளடங்கலாக, அதன் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் ஒவ்வொருவராலும் பெறப்படும் மாதப் பணியூதியம்;

(xi) திட்டங்கள், செய்யக் கருதப்பட்ட செலவினங்கள் மற்றும் பகிர்ந்தளிக்கப்பட்டவை பற்றிய விவர அறிக்கைகள் ஆகியவற்றைச் சுட்டிக்காட்டி, அதன் முகவாண்மை ஒவ்வொன்றிற்கும் குறித்தளிக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டம்;

(xii) ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகைகள் மற்றும் அத்தகைய திட்டங்களில் பயன்பெறுபவர்கள் குறித்த விவரங்கள் ஆகியவை உள்ளடங்கலாக, உதவித்தொகைத் திட்டங்களை நிறைவேற்றும் முறை;

(xiii) பொது அதிகாரஅமைப்பினால் வழங்கப்பட்ட சலுகைகள், அனுமதிகள் அல்லது அதிகார அளிப்புகளைப் பெறுபவர்களின் விவரங்கள்;

(xiv) மின்னணுப் படிவம் ஒன்றில் மாற்றப்பட்டு, பொது அதிகார அமைப்பிற்குக் கிடைக்கக்கூடிய அல்லது அதனால் வைத்து வரப்படும் தகவல் பற்றிய விவரங்கள்;

(xv) பொதுமக்கள் பயன்பாட்டிற்காக வைத்து வரப்படுகிற நூலகம் அல்லது படிப்பறை திறந்திருக்கும் பணி நேரங்கள் உள்ளடங்கலான, தகவலைப் பெறுவதற்காக குடிமக்களுக்குக் கிடைக்கக்கூடிய வசதிகள் பற்றிய விவரங்கள்;

(xvi) பொதுத் தகவல் அலுவலர்களின் பெயர்கள், பதவிப் பெயர்கள் மற்றும் பிற விவரங்கள்;

(xvii) வகுத்துரைக்கப்படலாகிற பிற தகவல்;

(இ) பொதுமக்களைப் பாதிக்கக்கூடிய முக்கியமான கொள்கைகளை வகுத்தமைக்கிறபோது அல்லது முடிபுகளை அறிவிக்கிறபோது, தொடர்புடைய பொருண்மைகள் அனைத்தையும் வெளியிடுதல் வேண்டும்.

(ஈ) பாதிக்கப்பட்டவர்களுக்கு அதன் நிருவாக அல்லது நீதிமுறைச் சார்புடைய முடிபுகளுக்கான காரணங்களைத் தெரிவித்தல் வேண்டும்.

(2) தகவலைப் பெறும் நோக்கத்திற்காகப் பொதுமக்கள் இந்தச் சட்டத்தினை மிகக் குறைந்த அளவிலேயே பயன்படுத்தும் வகையில், ஒவ்வொரு பொது அதிகார அமைப்பும், (1) ஆம் உட்பிரிவின் (ஆ) கூறின் வேண்டுறுத்தல்களுக்கிணங்க, வலைப்பின்னல் உள்ளடங்கலாக, பல்வேறு வகைத் தகவல் அறிவிப்பு மூலம் முறையான கால இடைவெளிகளில் தாமாகவே முற்பட்டு, தம்மால் இயன்றவரை, அதிகத் தகவலை அளிப்பதற்காக நடவடிக்கைகள் எடுக்க தொடர்ந்து முயலுதல் வேண்டும்.

(3). (1) ஆம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, ஒவ்வொரு தகவலும் விரிவாகப் பரப்பப்படுதல் வேண்டும்; மற்றும் அவை பொதுமக்கள் எளிதாகப் பெறக்கூடிய முறையிலும், வடிவத்திலும் இருத்தல் வேண்டும்.

(4) தகவல்கள் அனைத்தும், அதற்காகும் செலவுத்தொகை, அந்த வட்டாரத்திலுள்ள வட்டாரமொழி, அங்கு தகவல் தெரிவிக்க மிகுந்த பயனுள்ள முறை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு தெரிவிக்கப்படுதல் வேண்டும் மற்றும் மையப் பொதுத்தகவல் அலுவலரிடம் அல்லது, நேர்வுக்கேற்ப, மாநிலப் பொதுத் தகவல் அலுவலரிடம் கட்டணமின்றி அல்லது குறைந்த கட்டணத்தில் அல்லது அச்சடிப்பதற்காகும் கட்டணத்தில், கூடுமான அளவிற்கு, மின்னணு படிவத்தில் எளிதில் கிடைக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

**விளக்கம்.**—(3), (4) ஆகிய உட்பிரிவுகளின் நோக்கங்களுக்காக, "தகவலினைப் பரப்புதல்" என்பது, பொது அதிகாரஅமைப்பு எதன் அலுவலகங்களையும் ஆய்வு செய்தல் உள்ளடங்கலாக, அறிவிப்புப் பலகைகள், செய்தித்தாள்கள், பொது அறிவிப்புகள், செய்தி பரப்புச் சாதனங்கள், வலைப்பின்னல் மூலமாக அல்லது பிறமுறை எதன் மூலமாகவும் பொதுமக்களுக்குத் தகவலை தெரியச் செய்வது அல்லது தெரிவிப்பது என்று பொருள்படும்.

பொதுத் தகவல் அலுவலர்களைப் பதவிப்பெயர் குறித்தமர்த்துதல்.

5. (1) பொது அதிகாரஅமைப்பு ஒவ்வொன்றும், இந்தச் சட்டத்தின்படி தகவலினைக் கோருகிறவர்களுக்குத் தகவலினை அளிக்க, அனைத்து நிருவாகப் பிரிவுகளிலும் அல்லது அதன்கீழுள்ள அலுவலகங்களில், தேவைப்படலாகிற எண்ணிக்கையிலான அலுவலர்களை இந்தச் சட்டம் இயற்றப்பட்ட நூறு நாட்களுக்குள் பதவிப்பெயர் குறித்தமர்த்துதல் வேண்டும்.

(2). (1) ஆம் உட்பிரிவின் வகைமுறைகளுக்குக் குந்தகமின்றி, ஒவ்வொரு பொது அதிகாரஅமைப்பும் இந்தச் சட்டத்தின்படி தகவலுக்கான விண்ணப்பங்களை அல்லது மேல்முறையீடுகளைப் பெற்று, அவற்றை உடனுக்குடன் மையப் பொதுத்தகவல் அலுவலருக்கு அல்லது மாநிலப் பொதுத் தகவல் அலுவலருக்கு அல்லது 19 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி குறித்துரைக்கப்பட்ட பணி மூப்பு அலுவலருக்கு அல்லது மையத்தகவல் ஆணையத்திற்கு அல்லது, நேர்வுக்கேற்ப, மாநிலத் தகவல் ஆணையத்திற்கு மேலனுப்புவதற்காக, உட்கோட்ட நிலை ஒவ்வொன்றிலும் அல்லது பிற உள்மாவட்ட நிலையில், இந்தச் சட்டம் இயற்றப்பட்ட நூறு நாட்களுக்குள், ஓர் அலுவலரை மையப் பொது உதவித் தகவல் அலுவலராக அல்லது, நேர்வுக்கேற்ப, ஒரு மாநிலப் பொது உதவித் தகவல் அலுவலராகப் பதவிப்பெயர் குறித்தமர்த்துதல் வேண்டும்:

**வரம்புரையாக**: ஒரு மையப் பொது உதவித் தகவல் அலுவலருக்கு அல்லது, நேர்வுக்கேற்ப, ஒரு மாநிலப் பொது உதவித் தகவல் அலுவலருக்கு தகவலுக்கான விண்ணப்பம் அல்லது மேல்முறையீடு ஒன்று அளிக்கப்படுகிறவிடத்து, 7ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி குறித்துரைக்கப்பட்ட மறுமொழி அளிப்பதற்கான காலத்தைக் கணக்கிடுகையில், ஐந்து நாள் காலஅளவானது சேர்க்கப்படுதல் வேண்டும்.

(3) மையப் பொதுத் தகவல் அலுவலர் அல்லது, நேர்வுக்கேற்ப, மாநிலப் பொதுத் தகவல் அலுவலர் ஒவ்வொருவரும், தகவல்பெற விரும்புகிற நபர்களிடமிருந்தான கோரிக்கைகள் குறித்து நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும்; மற்றும் அத்தகைய தகவலினைப் பெற விரும்புகிற நபர்களுக்கு நியாயமான உதவியினை அளித்தல் வேண்டும்.

153

(4) மையப் பொதுத் தகவல் அலுவலர் அல்லது, நேர்வுக்கேற்ப, மாநிலப் பொதுத் தகவல் அலுவலர் தம்முடைய கடமைகளை உரியவாறு செய்வதற்காக தேவையெனக் கருதுகிற பிற அலுவலர் எவரின் உதவியையும் நாடலாம்.

(5). (4) ஆம் உட்பிரிவின்படி எந்த அலுவலரின் உதவி நாடப்பட்டதோ அந்த அலுவலர் எவரும், தனது உதவியை நாடுகிற மையப் பொதுத் தகவல் அலுவலருக்கு அல்லது, நேர்வுக்கேற்ப, மாநிலப் பொதுத் தகவல் அலுவலருக்கு அனைத்து உதவிகளையும் செய்தல் வேண்டும் மற்றும் இந்தச் சட்டத்தின் வகைமுறைகளின் மீறுகை எதனையும் பொறுத்தவரை, அந்த அலுவலர், ஒரு மையப் பொதுத் தகவல் அலுவலராக அல்லது, நேர்வுக்கேற்ப, மாநிலப் பொதுத் தகவல் அலுவலராகப் பாவிக்கப்படுதல் வேண்டும்.

தகவல் பெறுவதற்கான கோரிக்கை.

6. (1) இந்தச் சட்டத்தின்படி தகவல் எதனையும் பெற விரும்புகிற ஒருவர், ஆங்கிலம் அல்லது இந்தியில் அல்லது அந்த விண்ணப்பம் செய்யப்படுகிற வட்டாரத்தின் ஆட்சிமொழியில் எழுத்து மூலமாக அல்லது மின்னணுச் சாதனம் மூலமாக வகுத்துரைக்கப்படலாகும் கட்டணத்துடன்,—

(அ) தொடர்புடைய பொது அதிகாரஅமைப்பின் மையப் பொதுத் தகவல் அலுவலருக்கு அல்லது, நேர்வுக்கேற்ப, மாநிலப் பொதுத் தகவல் அலுவலருக்கு,

(ஆ) மையப் பொது உதவித் தகவல் அலுவலருக்கு அல்லது, நேர்வுக்கேற்ப, மாநிலப் பொது உதவித் தகவல் அலுவலருக்கு

அவரால் அல்லது அவளால் நாடப்படும் தகவலின் விவரங்களை குறித்துரைத்து கோரிக்கை ஒன்றைச் செயதல் வேண்டும்:

**வரம்புரையாக:** அந்தக் கோரிக்கை, எழுத்து வடிவில் செய்யப்பட முடியாதவிடத்து, மையப் பொதுத் தகவல் அலுவலர், அல்லது, நேர்வுக்கேற்ப, மாநிலப் பொதுத் தகவல் அலுவலர் அந்தக் கோரிக்கையினை வாய்மொழியாகச் செய்கிறவருக்கு அதனை எழுத்துருவில் அளிப்பதற்கு நியாயமான அனைத்து உதவிகளையும் செய்தல் வேண்டும்.

(2) தகவலுக்காக கோரிக்கை செய்கிற விண்ணப்பதாரர் ஒருவர், அந்தத் தகவலினைக் கோருவதற்கான காரணத்தையோ அல்லது அவரை தொடர்பு கொள்வதற்காகத் தேவைப்படலாகிற விவரங்களைத் தவிர, தனிப்பட்ட பிற விவரங்கள் எவற்றையுமோ அளிக்குமாறு கோரப்படுதல் ஆகாது.

(3) எந்த ஒரு தகவல்,—

(i) பிறிதொரு பொது அதிகாரஅமைப்பினால் வைத்து வரப்படுகிறதோ, அல்லது

(ii) பிறிதொரு அதிகாரஅமைப்பின் செயற்பணிகளுடன் நெருங்கிய தொடர்புள்ளதாக அதன் உறு பொருளைக் கொண்டிருக்கிறதோ

அந்தத் தகவலைக் கோரி ஒரு பொது அதிகாரஅமைப்பிடம் விண்ணப்பம் ஒன்று செய்கிறவிடத்து, அந்த விண்ணப்பம், எந்தப் பொது அதிகாரஅமைப்புக்குச் செய்யப்பட்டதோ அந்தப் பொது அதிகாரஅமைப்பு அந்த விண்ணப்பத்தினை அல்லது அதன் பகுதியினை பிற அதிகாரஅமைப்பிற்கு மாற்றல் செய்து, அத்தகைய மாற்றல் பற்றி உடனடியாக விண்ணப்பதாரருக்குத் தெரிவித்தல் வேண்டும்:

**வரம்புரையாக:** இந்த உட்பிரிவினை ஒட்டி விண்ணப்பத்தினை மாற்றல் செய்வதானது, இயன்ற அளவு விரைவில், செய்யப்படுதல் வேண்டும்; ஆனால் எந்த நேர்விலும், அந்த விண்ணப்பம் பெறப்பட்ட தேதியிலிருந்து ஐந்து நாட்களுக்குப் பிற்படாமல் செய்யப்படுதல் வேண்டும்.

கோரிக்கையைத் தீர்வு செய்தல்.

7.(1) 5ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் வரம்புரைக்கு, அல்லது 6 ஆம் பிரிவின் (3)ஆம் உட்பிரிவின் வரம்புரைக்கு உட்பட்டு, மையப் பொதுத் தகவல் அலுவலர் அல்லது, நேர்வுக்கேற்ப, மாநிலப் பொதுத் தகவல் அலுவலர், 6 ஆம் பிரிவின்படி கோரிக்கை ஒன்றைப் பெற்றதன்பேரில், அதனை இயன்ற

அளவு விரைவிலும், எந்த நேர்விலும் அந்தக் கோரிக்கையைப் பெற்றதிலிருந்து முப்பது நாட்களுக்குள்ளும், வகுத்துரைக்கப்படலாகிற கட்டணம் செலுத்தப்படுவதன்பேரில், ஒன்று தகவலினை அளித்தலோ அல்லது 8ஆம் மற்றும் 9ஆம் பிரிவுகளில் குறித்துரைக்கப்பட்ட காரணங்களில் எதற்காகவும் அக்கோரிக்கையினை ஏற்க மறுத்தலோ வேண்டும்:

**வரம்புரையாக**: நாடப்பட்ட தகவலானது, ஒருவருடைய உயிர் அல்லது சுதந்திரம் தொடர்புடையதாக இருக்கிறவிடத்து, அதற்கான கோரிக்கை பெறப்பட்ட நாற்பத்து எட்டு மணி நேரத்திற்குள் அந்தத் தகவல் அளிக்கப்படுதல் வேண்டும்.

*(2)* மையப் பொதுத் தகவல் அலுவலர் அல்லது, நேர்வுக்கேற்ப, மாநிலப் பொதுத் தகவல் அலுவலர் *(1)*ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கக்கப்பட்ட காலத்திற்குள் கோரப்பட்ட தகவலின் பேரில் முடிபு எதனையும் அளிக்கத் தவறுவாராயின், மையப் பொதுத் தகவல் அலுவலர் அல்லது, நேர்வுக்கேற்ப, மாநிலப் பொதுத் தகவல் அலுவலர், அந்தக் கோரிக்கையினை ஏற்க மறுத்ததாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

*(3)* அந்தத் தகவல் அளிப்பதற்கான செலவுக்காக மேலுமான கட்டணம் எதுவும் செலுத்தப்படுவதன்பேரில், தகவல் அளிக்கப்படுதல் வேண்டும் என்பதாக முடிபு எடுக்கப்படுகிறவிடத்து, மையப் பொதுத் தகவல் அலுவலர் அல்லது, நேர்வுக்கேற்ப, மாநிலப் பொதுத் தகவல் அலுவலர், அந்தக் கோரிக்கையினை செய்கிற நபருக்கு—

(அ) தகவலினை அளிப்பதற்கான செலவாக அவரால் தீர்மானிக்கப்படுகிற மேலுமான கட்டணங்களின் விவரத்தை *(1)*ஆம் உட்பிரிவின்படி வகுத்துரைக்கப்பட்ட கட்டணத்திற்கிணங்க, அத்தொகையைத் தீர்மானித்ததற்கான கணக்குகளுடன் சேர்த்து, அந்தக் கட்டணத்தை வைப்பீடு செய்யுமாறு கோரியும் அனுப்புதல் வேண்டும்; மற்றும் அந்த உட்பிரிவில் சுட்டப்பட்ட முப்பது நாள் காலஅளவைக் கணக்கிடுகையில், மேற்சொன்ன விவரத்தினை அனுப்புவதற்கும் அந்தக் கட்டணத்தினைச் செலுத்துவதற்கும் இடையே உள்ள காலமானது விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(ஆ) மேல்முறையீட்டு அதிகாரஅமைப்பு, காலவரம்பு, நடவடிக்கை மற்றும் பிற படிவங்கள் எவையும் பற்றிய விவரங்கள் உள்ளடங்கலாக, விதிக்கப்பட்ட கட்டணத்தொகை அல்லது தகவலைப் பெறுவதற்கு வகை செய்யப்பட்ட முறை குறித்த முடிபினை மறுஆய்வு செய்வது பொறுத்து, அவருக்கு அல்லது அவளுக்குள்ள உரிமை தொடர்பான தகவலை அளித்தல் வேண்டும்.

*(4)* இந்தச் சட்டத்தின்படி பதிவுருவினை அல்லது அதன் பகுதியினை அளிக்குமாறு கோரப்பட்டிருந்து, அது எந்த நபருக்கு அளிக்கப்பட வேண்டுமோ அந்த நபர் புலன் உணர்ச்சி அற்றவராக இருக்கிறவிடத்து, மையப் பொதுத் தகவல் அலுவலர் அல்லது, நேர்வுக்கேற்ப, மாநிலப் பொதுத் தகவல் அலுவலர் பதிவுருவினைப் பார்வையிடுவதற்கு உரியதாகும் உதவியை அளிப்பது உள்ளடங்கலாக, அந்தத் தகவலினைப் பெறுவதற்கும் அவருக்கு உதவி செய்தல் வேண்டும்.

*(5)* தகவல் அச்சடிக்கப்பட்ட படிவத்தில் அல்லது மின்னணுப் படிவம் எதிலும், அளிக்கப்பட வேண்டியிருக்கிறவிடத்து, விண்ணப்பதாரர், *(6)*ஆம் உட்பிரிவின் வகைமுறைகளுக்கு உட்பட்டு, வகுத்துரைக்கப்படலாகும் அந்தக் கட்டணத்தைச் செலுத்துதல் வேண்டும்:

**வரம்புரையாக**: 6 ஆம் பிரிவின் *(1)*ஆம் உட்பிரிவின்படியும், 7ஆம் பிரிவின் *(1)*ஆம் மற்றும் *(5)*ஆம் உட்பிரிவுகளின்படியும், வகுத்துரைக்கப்பட்ட கட்டணமானது நியாயமானதாக இருத்தல் வேண்டும்; மற்றும் வறுமைக்கோட்டிற்குக் கீழுள்ள நபர்களிடமிருந்து உரிய அரசாங்கத்தினால் தீர்மானிக்கப்படலாகிற கட்டணம் எதுவும் வசூலிக்கப்படுதல் ஆகாது.

*(6)*. *(5)*ஆம் உட்பிரிவில் அடங்கியுள்ள எது எவ்வாறு இருப்பினும், *(1)*ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட காலவரம்பிற்குள் இணங்கி நடக்க ஒரு பொது

அதிகாரஅமைப்பு தவறுகிறவிடத்து, தகவல் வேண்டுகிற நபருக்கு அந்தத் தகவல் கட்டணமின்றி அளிக்கப்படுதல் வேண்டும்.

(7). (1)ஆம் உட்பிரிவின்படி முடிபு எதனையும் எடுப்பதற்கு முன்னர், மையப் பொதுத் தகவல் அலுவலர் அல்லது, நேர்வுக்கேற்ப, மாநில பொதுத் தகவல் அலுவலர், 11ஆம் பிரிவின்படி ஒரு மூன்றாம் தரப்பினரால் செய்யப்பட்ட முறையீட்டினைக் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

(8). (1)ஆம் உட்பிரிவின்படி கோரிக்கை ஒன்று மறுக்கப்படுகிறவிடத்து, மையப் பொதுத் தகவல் அலுவலர் அல்லது, நேர்வுக்கேற்ப, மாநிலப் பொதுத் தகவல் அலுவலர், அந்தக் கோரிக்கையினை செய்கிற நபருக்கு,—

(i) அவ்வாறு மறுப்பதற்கான காரணங்களையும்,

(ii) அவ்வாறு மறுக்கப்பட்டதை எதிர்த்து ஒரு மேல்முறையீடு எந்தக் காலத்திற்குள் தாக்கல் செய்யப்படுதல் வேண்டும் என்பதையும்,

(iii) மேல்முறையீட்டு அதிகாரஅமைப்பு குறித்த விவரங்களையும் தெரியப்படுத்துதல் வேண்டும்.

(9) பொது அதிகாரஅமைப்பின் வளஆதாரங்களை உரிய விகிதத்தில் அல்லாமல் திசை திருப்புவதாக இருக்கக்கூடும் அல்லது பிரச்சினையிலுள்ள பதிவுருவினைப் பாதுகாப்பதற்கு அல்லது பேணிக் காப்பதற்குக் குந்தகம் விளைவிப்பதாக இருக்கக்கூடும் என்றாலன்றி, அத்தகவல் நாடப்பட்ட படிவத்திலேயே சாதாரணமாக அளிக்கப்படுதல் வேண்டும்.

தகவலினை வெளியிடுவதிலிருந்து விலக்களிப்பு.

8. (1) இந்தச் சட்டத்தில் அடங்கியுள்ள எது எவ்வாறு இருப்பினும், குடிமக்கள் எவருக்கும் பின்வரும் தகவலை அளிக்கும் கடமைப் பொறுப்பு எதுவும் இல்லை:—

(அ) எந்தத் தகவலை வெளிப்படுத்துவது, இந்தியாவின் இறையாண்மை மற்றும் ஒருமைப்பாடு, அரசின் பாதுகாப்பு, போர்த்திறம், அறிவியல் அல்லது பொருளாதாரம் சார்ந்த நலன்கள், அயல்நாட்டுடனான உறவு ஆகியவற்றை குந்தகமான வகையில் பாதிக்கக்கூடுமோ மற்றும் ஒரு குற்றச்செயலினைச் செய்யத் தூண்டக்கூடுமோ அந்தத் தகவல்;

(ஆ) எந்தத் தகவலை வெளிப்படுத்துவது நீதிமன்றம் அல்லது தீர்ப்பாயம் எதனாலும் வெளிப்படையாகத் தடை செய்யப்பட்டிருக்கிறதோ அல்லது அதனை வெளிப்படுத்துவது நீதிமன்ற அவமதிப்பாக அமையலாமோ அந்தத் தகவல்;

(இ) எந்தத் தகவலை வெளிப்படுத்துவது நாடாளுமன்றத்தின் அல்லது மாநில சட்டமன்றத்தின் சிறப்புரிமையின் மீறுகையை ஏற்படுத்தக்கூடுமோ அந்தத் தகவல்;

(ஈ) வணிக மந்தணம், வர்த்தக இரகசியங்கள் அல்லது அறிவார்ந்த சொத்து குறித்த எந்தத் தகவல், மூன்றாம் தரப்பினரின் போட்டி நிலைக்கு தீங்கு விளைவிக்குமோ அந்தத் தகவலை வெளியிடுவது பெரும்பான்மையான பொதுமக்களின் நலனுக்கு தேவைப்படுகிறதென, தகுதிறமுள்ள அதிகாரஅமைப்பு தெளிவுறக்கண்டாலன்றி, வெளியிடப்படும் அத்தகவல்;

(உ) நம்பகத்தன்மையிலான தொடர்புநிலையில் ஒரு நபருக்குக் கிடைக்கக்கூடிய தகவல்; அத்தகைய தகவல் பெரும்பான்மையான பொதுமக்களின் நலனுக்கு தேவைப்படுகிறதென தகுதிறமுள்ள அதிகாரஅமைப்பு தெளிவுறக்கண்டாலன்றி வெளியிடப்படும் அத்தகவல்;

(ஊ) அயல்நாட்டு அரசிடமிருந்து மந்தணமாகப் பெறப்பட்ட தகவல்;

(எ) எந்தத் தகவலை வெளிப்படுத்துவது, ஒரு நபரின் உயிருக்கு அல்லது உடலின் பாதுகாப்பிற்கு இடருண்டாக்குமோ அல்லது சட்டத்தினைச் செயற்படுத்துவதற்காக அல்லது பாதுகாப்பு நோக்கத்திற்காக மந்தணமாக அளிக்கப்பட்ட தகவலின் அல்லது உதவியின் ஆதாரங்களை இனங்காட்டக்கூடுமோ அந்தத் தகவல்;

(ஏ) எந்தத் தகவல் புலனாய்வு நடவடிக்கைகளை அல்லது குற்றவாளிகளை கைது செய்தல் அல்லது அவர்கள் மீது குற்றவழக்குத் தொடர்தலைத் தடை செய்யக்கூடுமோ அந்தத் தகவல்;

(ஐ) அமைச்சரவை, செயலாளர்கள் மற்றும் பிற அலுவலர்களின் ஆழ்ந்தாராய்வு குறித்த பதிவுருக்கள் உள்ளடங்கலான, அமைச்சர் குழுவின் தாள் ஆவணங்கள்:

**வரம்புரையாக**: அமைச்சரவையின் முடிபுகள், அதற்கான காரணங்கள் மற்றும் எந்தப் பொருட்பாடுகளின் அடிப்படையில் அந்த முடிபுகள் எடுக்கப்பட்டனவோ அந்தப் பொருட்பாடுகள் முடிவு எடுக்கப்பட்ட பின்னரும், பொருட்பாடு நிறைவெய்திய அல்லது முடிவுற்ற பின்னரும், பொதுமக்களுக்கு தெரிவிக்கப்படுதல் வேண்டும்:

**மேலும் வரம்புரையாக**: இந்தப் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட விதிவிலக்குகளின் கீழ்வரும் அந்த பொருட்பாடு வெளிப்படுத்தப்படுதல் ஆகாது.

(ஒ) தனிப்பட்டவர் தகவல் தொடர்பான எந்தத் தகவலை வெளிப்படுத்துவது பொதுமக்கள் நலனுக்கு தேவையாக உள்ளது என நேர்வுக்கேற்ப, மையத் தகவல் அலுவலர் அல்லது மாநிலப் பொதுத் தகவல் அலுவலர் அல்லது மேல்முறையீட்டு அதிகாரஅமைப்பு தெளிவுறக்கண்டாலன்றி எந்தத் தகவலை வெளிப்படுத்துவது, பொதுமக்களின் செயற்பாட்டுடன் அல்லது நலனுடன் எந்த தொடர்பும் உடையதாக இல்லையோ அந்தத் தகவல் அல்லது எந்தத் தகவல் தனிப்பட்டவரின் அந்தரங்கத்தில் விரும்பத்தகாது நுழைவதாக அமையக்கூடுமோ அந்தத் தனிப்பட்டவர் தொடர்பான தகவல்:

**வரம்புரையாக:** நாடாளுமன்றத்திற்கு அல்லது ஒரு மாநிலச் சட்டமன்றத்திற்கு மறுக்கப்பட முடியாத தகவல், எந்த ஒரு, நபருக்கும் மறுக்கப்படுதல் ஆகாது.

(2) 1923ஆம் ஆண்டு அலுவலக மறையங்கள் சட்டத்தில் அல்லது (1)ஆம் உட்பிரிவிற்கு இணங்க அனுமதிக்கத்தக்க விதிவிலக்குகள் எவற்றிலும் உள்ள எது எவ்வாறிருப்பினும், தகவலை வெளிப்படுத்துவதில் உள்ள பொதுநலன் பாதுகாக்கப்பட்ட நலன்களுக்கு ஏற்படும் தீங்கிற்கு உயர்வாக இருக்குமாயின், ஒரு பொது அதிகாரஅமைப்பானது, தகவலினைப் பெறுவதற்கு அனுமதி அளிக்கலாம்.

(3). (1)ஆம் பிரிவின் (அ), (இ), (ஐ) ஆகிய கூறுகளின் வகைமுறைகளுக்கு உட்பட்டு, எந்தத் தேதியில் 6ஆம் பிரிவின்படி கோரிக்கை எதுவும் செய்யப்பட்டதோ அந்தத் தேதிக்கு இருபது ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற நிகழ்ச்சி, நேரிட்ட சம்பவம் அல்லது நடந்த காரியம் தொடர்பான தகவல் எதுவும், கோரிக்கையினை செய்த நபர் எவருக்கும் அளிக்கப்படுதல் வேண்டும்:

**வரம்புரையாக**: மேற்சொன்ன இருபது ஆண்டு காலமானது, எந்தத் தேதியிலிருந்து கணிக்கப்படுகிறது என்பது பற்றி வினா எதுவும் எழுகிறவிடத்து, இந்தச் சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ள வழக்கமான மேல்முறையீடுகளுக்கு உட்பட்டு, மைய அரசாங்கத்தின் முடிபே அறுதியானதாகும்.

குறித்தசில நேர்வுகளில் தகவலினை அளிக்க மறுக்கும் காரணங்கள்.

9. 8ஆம் பிரிவின் வகைமுறைகளுக்கு குந்தகமின்றி, ஒரு மையப் பொதுத் தகவல் அலுவலர் அல்லது, நேர்வுக்கேற்ப, மாநிலப் பொதுத் தகவல் அலுவ்லர், தகவலினைப் பெறுவதற்கான கோரிக்கையானது, அரசு அல்லாத பிற நபர் ஒருவருக்கு இருந்து வருகிற பதிப்புரிமை மீறுகையாக அமைகிறவிடத்து, அந்தத் தகவலை அளிப்பதற்கான கோரிக்கையை ஏற்க மறுக்கலாம்.

பிரித்தளித்தல்.

10. (1) தகவலினைப் பெறுவதற்கான கோரிக்கை ஒன்று, வெளியிடுவதிலிருந்து விலக்களிக்கப் பெற்றிருக்கிற தகவலுடன் அது தொடர்புடையதாயிருக்கிறது என்ற காரணத்தின்பேரில் மறுக்கிறப்படுகிறவிடத்து, இந்தச் சட்டத்தில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், இந்தச் சட்டத்தின்படி வெளியிடுவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ள மற்றும் விலக்களிக்கப்பட்ட தகவல் அடங்கியுள்ள பகுதி எதிலிருந்தும் நியாயமான முறையில் பிரித்தளிக்கப்படக்கூடிய தகவல் எதுவும் அளிக்கப்படலாம்.

157

(2). (1)ஆம் உட்பிரிவின்படி பதிவுருவின் பகுதியினைப் பெறுவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறவிடத்து, மையப் பொதுத் தகவல் அலுவலர் அல்லது, நேர்வுக்கேற்ப, மாநிலப் பொதுத் தகவல் அலுவலர்,—

(அ) வெளியிடுவதிலிருந்து விலக்களிக்கப்பட்ட தகவலைக் கொண்டுள்ள பதிவுரு பிரிக்கப்பட்ட பின் கோரப்பட்ட பதிவுருவின் பகுதி மட்டுமே அளிக்கப்படுகிறது என்று தெரிவித்து,

(ஆ) பொருண்மை பற்றிய இன்றியமையா வினா எதன் பேரிலுமான முடிவுகள் எவையும் உள்ளடங்கலாக, அந்த முடிவுகளுக்கு ஆதாரமான பொருட்பாட்டை சுட்டுகிற முடிபுகளின் பேரிலான காரணங்களைத் தெரிவித்து,

(இ) அந்த முடிபினை அளிக்கிற நபரின் பெயர் மற்றும் பதவிப் பெயரினைத் தெரிவித்து,

(ஈ) அவரால் கணக்கிடப்பட்ட கட்டணங்களின் விவரங்களையும் விண்ணப்பதாரர் வைப்பீடு செய்யுமாறு கோரப்பட்ட கட்டணத் தொகையையும் தெரிவித்து,

(உ) 19ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின்படி குறித்துரைக்கப்பட்ட பணிமூப்பு அலுவலர் அல்லது மையத் தகவல் ஆணையம் அல்லது நேர்வுக்கேற்ப, மாநிலத் தகவல் ஆணையம் பற்றிய விவரங்கள் உள்ளடங்கலாக, தகவலின் ஒரு பகுதியை வெளியிடாமை தொடர்பான முடிபை மறு ஆய்வு செய்வதற்கு அவருக்குள்ள உரிமைகள், விதிக்கப்பட்ட கட்டணத்தொகை, தகவல் பெற வகை செய்யப்பட்ட முறை, காலவரம்பு, நடவடிக்கை மற்றும் தகவல் பெறக்கூடிய பிற முறை ஆகியவற்றைத் தெரிவித்து

விண்ணப்பதாரருக்கு அறிவிப்பு ஒன்றை அளித்தல் வேண்டும்.

மூன்றாம் தரப்பினரின் தகவல்.

11. (1) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட ஒரு கோரிக்கையின்பேரில், ஒரு மையப் பொதுத் தகவல் அலுவலர் அல்லது, நேர்வுக்கேற்ப, மாநிலப் பொதுத் தகவல் அலுவலர் மூன்றாம் தரப்பினருடன் தொடர்புடையதாக அல்லது மூன்றாம் தரப்பினரால் வழங்கப்பட்டிருந்து அந்த மூன்றாம் தரப்பினரால் அது இரகசியமானதெனக் கருதப்படுகிற தகவல் அல்லது பதிவுரு அல்லது அதன் பகுதி எதனையும் வெளியிடக் கருதுகிறவிடத்து, மையப் பொதுத் தகவல் அலுவலர் அல்லது, நேர்வுக்கேற்ப, மாநிலப் பொதுத் தகவல் அலுவலர், அந்த கோரிக்கை பெறப்பட்டதிலிருந்து ஐந்து நாட்களுக்குள், கோரிக்கைப் பற்றியும், அந்த மையப் பொதுத் தகவல் அலுவலர் அல்லது, நேர்வுக்கேற்ப, மாநிலப் பொதுத் தகவல் அலுவலர் அந்தத் தகவலை அல்லது பதிவுருவை அல்லது அதன் பகுதியை வெளியிட விரும்புகிறார் என்னும் பொருண்மை பற்றியும், மூன்றாம் தரப்பினருக்கு, எழுத்து வடிவிலான அறிவிப்பு ஒன்றை அளித்து, அந்தத் தகவல் வெளியிட வேண்டுமா வேண்டாமா என்பது பற்றி எழுத்து வடிவில் அல்லது வாய்மொழியாக தனது கருத்தை பணிந்தனுப்புமாறு மூன்றாம் தரப்பினரைக் கோருதல் வேண்டும் மற்றும் அந்தத் தகவலை வெளியிடுவது குறித்து முடிவு எடுக்கும்போது மூன்றாம் தரப்பினரால் அளிக்கப்பட்ட கருத்து கவனத்தில் கொள்ளப்படுதல் வேண்டும்:

வரம்புரையாக: சட்டத்தினால் பாதுகாப்பளிக்கப்பட்ட தொழில் அல்லது வாணிப ரகசியங்கள் பொறுத்த நேர்வில், வெளியிடுவதில் பொதுமக்களுக்கு ஏற்படும் நலன் மூன்றாம் தரப்பினரின் நலன்களுக்கு ஏற்படக்கூடிய ஊறு அல்லது கேடு எதனையும் விட முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்குமாயின், வெளியிடுவதை அனுமதிக்கலாம்.

(2). (1)ஆம் உட்பிரிவின்படி மையப் பொதுத் தகவல் அலுவலரால் அல்லது, நேர்வுக்கேற்ப, மாநிலப் பொதுத் தகவல் அலுவலரால் மூன்றாம் தரப்பினருக்கு தகவல் அல்லது பதிவுரு அல்லது அதன் பகுதி தொடர்பாக

அறிவிப்பு ஒன்று சார்வு செய்யப்படுகிறவிடத்து, மூன்றாம் தரப்பினர் அந்த அறிவிப்பு பெறப்பட்ட தேதியிலிருந்து பத்து நாட்களுக்குள், வெளியிடக் கருதியதை எதிர்த்து முறையீடு செய்வதற்கு வாய்ப்பு வழங்கப்படுதல் வேண்டும்.

(3). 7ஆம் பிரிவில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், பொதுத் தகவல் அலுவலர், 6ஆம் பிரிவின்படியான கோரிக்கையினைப் பெற்ற பின்பு நாற்பது நாட்களுக்குள், (2) ஆம் உட்பிரிவின்படி சார்பாற்றத்தினைச் செய்வதற்கு வாய்ப்பு ஒன்று அளிக்கப்படுமாயின், அந்தத் தகவலினை அல்லது பதிவுருவை அல்லது அதன் பகுதியினை வெளியிடலாமா அல்லது வேண்டாமா என்பது பற்றி முடிவு செய்து, தமது முடிவு பற்றிய அறிவிப்பை எழுத்து வடிவில் மூன்றாம் தரப்பினருக்கு அளிக்கலாம்.

(4). (3)ஆம் உட்பிரிவின்படி அளிக்கப்பட்ட அறிவிப்பு ஒன்று, 19ஆம் பிரிவின்படி அந்த முடிவுக்கு எதிராக மேல்முறையீடு செய்வதற்கு எவருக்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டதோ அந்த மூன்றாம் தரப்பினர், உரிமை கொண்டவர் என்கிற விவரவுரையினை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

## அத்தியாயம் III

## மையத் தகவல் ஆணையம்

மையத் தகவல் ஆணையத்தை அமைத் துருவாக்குதல்.

12. (1) மைய அரசாங்கமானது, இந்தச் சட்டத்தின்படி அதற்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைச் செலுத்தவும் குறித்தளிக்கப்பட்ட செயற்பணிகளை ஆற்றவும், மையத் தகவல் ஆணையம் என்று அழைக்கப்படும் ஒரு குழுமத்தை, அதிகாரமுறை **அரசிதழில்** அறிவிக்கை வாயிலாக அமைத்துருவாக்குதல் வேண்டும்.

(2) அந்த மையத் தகவல் ஆணையமானது,—

(அ) தலைமைத் தகவல் ஆணையரையும்,

(ஆ) பத்துக்கு மேற்படாததும் அது தேவையெனக் கருதலாகிறதுமான எண்ணிக்கையில் மையத் தகவல் ஆணையர்களையும்,

கொண்டது ஆகும்.

(3) தலைமைத் தகவல் ஆணையரும், தகவல் ஆணையர்களும் பின்வருபவர்களைக் கொண்ட ஒரு குழுவின் பரிந்துரையின்பேரில், குடியரசுத் தலைவரால் அமர்த்தப்படுதல் வேண்டும்,—

(i) பிரதமர், அவர் இந்தக் குழுவின் தலைவராக இருப்பார்;

(ii) மக்களவையின் எதிர்க்கட்சித் தலைவர்; மற்றும்

(iii) பிரதமரால் நியமிக்கப்படும் ஒன்றியத்தின் அமைச்சர்.

**விளக்கம்.**—ஐயப்பாடுகளை அகற்றுவதற்காக மக்களவையில் எதிர்க்கட்சித் தலைவராக அவர் ஏற்றுக் கொள்ளப்படாதிருக்கிறவிடத்து, மக்களவையில் அரசாங்கத்திற்கு எதிர்க் கட்சியாகவுள்ள தனித்த பெருங்குழுவின் தலைவர், எதிர்க்கட்சித் தலைவராகக் கொள்ளப்படுதல் வேண்டும் என்று இதன்மூலம் விளம்பப்படுகிறது.

(4) மையத் தகவல் ஆணையத்தின் பொதுக் கண்காணிப்பு, மேலாட்சி மற்றும் அலுவல் மேலாண்மை, தலைமைத் தகவல் ஆணையரிடம் உற்றமைந்திருக்கும். அவருக்குத் தகவல் ஆணையர்கள் உதவியாக இருப்பர் மற்றும் இந்தச் சட்டத்தின்படியான பிற அதிகாரஅமைப்பு எதனின் பணிப்புரைக்கும் உட்பட்டிராது, தன்னாட்சி அமைப்பாக மையத் தகவல் ஆணையத்தினால் செலுத்தப்படலாகும் அதிகாரங்கள் அனைத்தையும் அவர் செலுத்தலாம் அல்லது செய்யலாகும் அனைத்துச் செயல்களையும் காரியங்களையும் புரியலாம்.

159

(5) தலைமைத் தகவல் ஆணையர் மற்றும் தகவல் ஆணையர்கள், அவர்கள் சட்டம், அறிவியல், தொழில்நுட்பம், சமூக சேவை, மேலாண்மை, இதழியல், பொதுத் தொலைத் தொடர்பு அல்லது நிருவாகம் மற்றும் ஆட்சிமுறை இவற்றில் ஆழமான அறிவுத் திறமும் பட்டறிவும் கொண்டவர்களாக இருந்து, பொது வாழ்வில் சிறப்புடையவர்களாக இருப்பர்.

(6) தலைமைத் தகவல் ஆணையர் அல்லது தகவல் ஆணையர், நாடாளுமன்றத்தின் ஓர் உறுப்பினராக அல்லது, நேர்வுக்கேற்ப, மாநிலத்தின் அல்லது ஒன்றியத்து ஆட்சி நிலவரை ஏதொன்றின் சட்டமன்றத்தின் உறுப்பினராக அல்லது ஆதாயம் நல்கும் பிற பதவி எதனையும் வகிப்பவராக அல்லது அரசியல் கட்சி எதனையும் சார்ந்தவராக அல்லது வணிகம் எதனையும் அல்லது தொழில் எதனையும் செய்பவராக இருத்தல் ஆகாது.

(7) மையத் தகவல் ஆணையத்தின் தலைமையிடம் தில்லியில் இருத்தல் வேண்டும் மற்றும் மையத் தகவல் ஆணையம், மைய அரசாங்கத்தின் முன் ஒப்பேற்புடன் இந்தியாவில் வேறு இடங்களில் தனது அலுவலகங்களை நிறுவலாம்.

பதவிக்காலமும் பணிவரைக் கட்டுகளும்.

13. (1) தலைமைத் தகவல் ஆணையர், தாம் பதவியேற்கும் தேதியிலிருந்து ஐந்தாண்டு கால அளவிற்குப் பதவி வகிப்பார் மற்றும் மறுமுறை அமர்த்தப்படுவதற்குத் தகுதியுடையவர் ஆகார்:

**வரம்புரையாக:** தலைமைத் தகவல் ஆணையர் எவரும், தாம் அறுபத்து ஐந்து வயது நிறைவெய்திய பின்பு பதவி வகித்தல் ஆகாது.

(2) தகவல் ஆணையர் ஒவ்வொருவரும், தாம் பதவியேற்கும் தேதியிலிருந்து ஐந்தாண்டு கால அளவிற்கு அல்லது தாம் அறுபத்து ஐந்து வயது நிறைவெய்தும் வரையில், இவற்றில் எது முந்தியதோ, அதுவரையில், பதவி வகிப்பார், மற்றும் அத்தகைய தகவல் ஆணையராக மறுமுறையும் அமர்த்தப்படுவதற்குத் தகுதியுடையவர் ஆகார்:

**வரம்புரையாக:** தகவல் ஆணையர் ஒவ்வொருவரும், இந்த உட்பிரிவின்படி தம் பதவியைக் காலி செய்வதன் பேரில், 12ஆம் பிரிவின் (3)ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட முறையில், தலைமைத் தகவல் ஆணையராக அமர்த்தப்படுவதற்குத் தகுதியுடையவர் ஆவார்:

**மேலும் வரம்புரையாக:** தகவல் ஆணையர், தலைமைத் தகவல் ஆணையராக அமர்த்தப்படுகிறவிடத்து, தகவல் ஆணையராகவும் தலைமைத் தகவல் ஆணையராகவும் அவருடைய மொத்தப் பதவிக்காலம் ஐந்து ஆண்டுக்கு மேற்படுதல் ஆகாது.

(3) தலைமைத் தகவல் ஆணையர் அல்லது ஒரு தகவல் ஆணையர் தாம் பதவியேற்பதற்கு முன்பு, குடியரசுத்தலைவரின் அல்லது இதற்கென அவரால் அமர்த்தப்பட்ட பிற நபரின் முன்பு, முதலாம் இணைப்புப்பட்டியலில் அதற்கென உள்ள படிவத்திற்கிணங்க, ஆணைமொழி அல்லது உறுதிமொழியை ஏற்றுக் கையொப்பமிடுதல் வேண்டும்.

(4) தலைமைத் தகவல் ஆணையர் அல்லது ஒரு தகவல் ஆணையர் எந்த நேரத்திலும், குடியரசுத்தலைவருக்குத் தம் கையொப்பமிட்டு எழுத்துவழிப் பதவி விலகுவதாகத் தெரிவித்து தம் பதவியை விட்டு விலகலாம்:

**வரம்புரையாக:** தலைமைத் தகவல் ஆணையர் அல்லது ஒரு தகவல் ஆணையர் 14ஆம் பிரிவின்படி குறித்துரைக்கப்பட்ட முறையில் பதவியிலிருந்து நீக்கப்படலாம்.

(5) (அ) தலைமைத் தகவல் ஆணையருக்கு, தலைமைத் தேர்தல் ஆணையருக்கு வழங்கத்தக்க அதேபோன்ற,

(ஆ) தகவல் ஆணையருக்கு, தேர்தல் ஆணையருக்கு வழங்கத்தக்க அதேபோன்ற,

வரையூதியங்களும், படித்தொகைகளும் வழங்கப்படுதலும், அதேபோன்ற பணி வரையுரைகளும், வரைக்கட்டுகளும் பொருந்துதலும் வேண்டும்:

***வரம்புரையாக:*** தலைமைத் தகவல் ஆணையர் அல்லது ஒரு தகவல் ஆணையர், தாம் அமர்த்தப்படும் நேரத்தில், இந்திய அரசாங்கத்தில் அல்லது ஒரு மாநில அரசாங்கத்தில் தாம் செய்த முந்தையப் பணி எதனையும் பொறுத்து, ஏலாமைக்கான ஓய்வூதியம் அல்லது காயமுற்றதற்கான ஓய்வூதியம் அல்லாத பிற ஓய்வூதியம் எதனையும் பெறுபவராயின், தலைமைத் தகவல் ஆணையர் அல்லது தகவல் ஆணையர் என்ற பணி பொறுத்த அவரது வரையூதியம் தொகுத்து பெறப்பட்ட ஓய்வூதியத்தின் ஒரு பகுதி எதுவும் உள்ளடங்கலான அந்த ஓய்வூதியத் தொகையும், ஓய்வூதியப் பணிக்கொடைக்குச் சமமான ஓய்வூதியம் நீங்கலான ஓய்வூதியத்தை ஒத்த பிறவகை ஓய்வூதிய நலப் பயன்களின் தொகையும் குறைக்கப்பட்டிருத்தல் வேண்டும்:

**மேலும் வரம்புரையாக:** தலைமைத் தகவல் ஆணையர் அல்லது ஒரு தகவல் ஆணையர், தாம் அமர்த்தப்படும் நேரத்தில், ஏதேனும் மையச் சட்டத்தாலோ அல்லது மாநிலச் சட்டத்தாலோ அல்லது அதன் வழியாலோ நிறுவப்பட்ட கூட்டுருமம் ஒன்றில் அல்லது மைய அரசாங்கத்திற்கு அல்லது மாநில அரசாங்கத்திற்குச் சொந்தமான அல்லது அதன் கட்டாள்கையிலுள்ள அரசாங்க நிறுமம் ஒன்றில் செய்த முந்தைய பணி எதுவும் பொறுத்த ஓய்வூதிய நலப்பயன்களைப் பெறுபவராயின், தலைமைத் தகவல் ஆணையர் அல்லது ஒரு தகவல் ஆணையர் என்ற பணி பொறுத்த அவரது வரையூதியம், ஓய்வூதிய நலப் பயன்களுக்குச் சமமான ஓய்வூதியத் தொகையானது குறைக்கப்பட்டிருத்தல் வேண்டும்:

**இன்னும் வரம்புரையாக:** தலைமைத் தகவல் ஆணையரின் மற்றும் தகவல் ஆணையரின் வரையூதியங்கள், படித்தொகைகள் மற்றும் பிற பணிவரைக்கட்டுகள் அவர்களுடைய அமர்த்தத்திற்குப் பின்பு அவர்களுக்குப் பாதகமான வகையில் மாற்றப்படுதல் ஆகாது.

(6) இந்தச் சட்டத்தின்படி தலைமைத் தகவல் ஆணையரும் தகவல் ஆணையர்களும் தம்முடைய பதவிப் பணிகளைத் திறம்பட புரிவதற்காகத் தேவைப்படலாகும் அலுவலர்களையும், பணியாளர்களையும் மைய அரசாங்கம் அளித்தல் வேண்டும் மற்றும் இந்தச் சட்டத்தின் நோக்கத்திற்காக அமர்த்தப்பட்ட அந்த அலுவலர்களுக்கும் பிற பணியாளர்களுக்கும் வழங்கப்படத்தக்க வரையூதியங்களும் படித்தொகைகளும் மற்றும் பணி வரையுரைகளும் வரைக்கட்டுகளும் வகுத்துரைக்கப்படலாகிறவாறு இருத்தல் வேண்டும்.

*தலைமைத் தகவல் ஆணையரை அல்லது தகவல் ஆணையரை நீக்குதல்*

14. (1). (3)ஆம் உட்பிரிவின் வகைமுறைகளுக்கு உட்பட்டு, குடியரசுத்தலைவரால் உச்ச நீதிமன்றத்திற்குச் சுட்டியனுப்பப்படுவதன் பேரில், மெய்ப்பிக்கப்பட்ட தவறான நடத்தை அல்லது. திறமையின்மையின் காரணத்தின்பேரில், தலைமை ஆணையர் அல்லது நேர்வுக்கேற்ப, எவரேனும் தகவல் ஆணையர் நீக்கப்படுதல் வேண்டும் என்று அறிக்கை செய்தபின்பு, குடியரசுத்தலைவரின் ஆணையினால் மட்டுமே தலைமைத் தகவல் ஆணையர் அல்லது எவரேனும் தகவல் ஆணையர் அத்தகைய காரணத்தின்பேரில், தம் பதவியிலிருந்து நீக்கப்படுதல் வேண்டும்.

(2) குடியரசுத்தலைவர் (1) ஆம் உட்பிரிவின்படி உச்ச நீதிமன்றத்திற்கு எவர் பொறுத்துச் சுட்டியனுப்பப்பட்டதோ அந்தத் தலைமைத் தகவல் ஆணையரை அல்லது தகவல் ஆணையரை அத்தகைய சுட்டியனுப்புகையின் பேரிலான உச்ச நீதிமன்றத்தின் அறிக்கையின்பேரில், குடியரசுத்தலைவரால் ஆணைகள் பிறப்பிக்கப்படும்வரையில், பதவியிலிருந்து தற்காலிகமாக நிறுத்திவைக்கலாம் மற்றும் தேவையெனக் கருதுவராயின் விசாரணையின்போது அலுவலகத்திற்கு வருகை புரிவதையும்கூட தடை செய்யலாம்.

(3). (1)ஆம் உட்பிரிவில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், தலைமைத் தகவல் ஆணையர் அல்லது, நேர்வுக்கேற்ப, எவரேனும் தலைமை ஆணையர்,—

(அ) நொடிப்புநிலையராகத் தீர்ப்பளிக்கப்படுவாராயின், அல்லது

(ஆ) குடியரசுத்தலைவரின் கருத்தின்படி, எந்தக் குற்றச்செயல், ஒழுக்கக்கேட்டினை உள்ளடக்கிய குற்றமாக உள்ளதோ அந்தக் குற்றச்செயலுக்காக அவர் தண்டனை பெற்றிருந்திருப்பாராயின், அல்லது

161

(இ) தம் பதவிக் காலத்தின்போது, தமது பதவிக்குரிய கடமைகளுக்கு வெளியே சம்பளம் பெறும் வேலை எதிலும் ஈடுபட்டிருப்பாராயின், அல்லது

(ஈ) குடியரசுத்தலைவரின் கருத்தின்படி, மனத் தளர்ச்சி அல்லது உடல் தளர்ச்சி காரணமாக பதவியில் தொடர்ந்திருப்பதற்குத் தகுதியற்றவராக இருப்பாராயின், அல்லது

(உ) தலைமைத் தகவல் ஆணையர் அல்லது தகவல் ஆணையர் என்ற முறையில் தமது பதவிப் பணிகளுக்குக் குந்தகம் விளைவிக்கக்கூடிய நிதி அல்லது பிற நலனைப் பெற்றிருப்பாராயின்

குடியரசுத்தலைவர் ஆணை வாயிலாக, தலைமைத் தகவல் ஆணையரை அல்லது எவரேனும் தகவல் ஆணையரைப் பதவியிலிருந்து நீக்கலாம்.

(4) தலைமைத் தகவல் ஆணையர் அல்லது தகவல் ஆணையர், எந்த வகையிலும், இந்திய அரசாங்கத்தினால் அல்லது அதன் சார்பாகச் செய்யப்படும் ஒப்பந்தம் அல்லது உடன்பாடு எதிலும் தொடர்புடையவராக அல்லது உரித்தமுடையவராக இருப்பாராயின் அல்லது உறுப்பினர் என்ற முறையில் அல்லாது பிறவாறு அதிலிருந்து கிடைக்கக்கூடிய ஆதாயத்தை அல்லது நலப்பயனை அல்லது பதவியூதியத்தை எந்த வகையிலும் ஒரு கூட்டுரும நிறுமத்தின் உறுப்பினர்கள் அல்லாத பிறர் போன்று பெறுவாராயின், அவர் (1) ஆம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, தவறான நடத்தைக் குற்றம் செய்தவராகக் கருதப்படுவார்.

## அத்தியாயம் IV

## மாநிலத் தகவல் ஆணையம்

15. (1) மாநில அரசாங்கம் ஒவ்வொன்றும், இந்தச் சட்டத்தின்படி அதற்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைச் செலுத்தவும் குறித்தளிக்கப்பட்ட செயற்பணிகளை ஆற்றவும் (மாநிலத்தின் பெயர்)..............................................தகவல் ஆணையம் என்று அழைக்கப்படும் ஒரு குழுமத்தை அமைத்துருவாக்குதல் வேண்டும்.

மாநிலத் தகவல் ஆணையத்தினை அமைத்துரு வாக்குதல்.

(2) மாநிலத் தகவல் ஆணையமானது,—

(அ) மாநிலத் தலைமை ஆணையரையும்,

(ஆ) பத்துக்கு மேற்படாததும், அது தேவையெனக் கருதலாகிறதுமான எண்ணிக்கையில் மாநிலத் தகவல் ஆணையர்களையும்,

கொண்டது ஆகும்.

(3) மாநிலத் தகவல் ஆணையரும் மற்றும் மாநிலத் தகவல் ஆணையர்களும், பின்வருபவர்களைக் கொண்ட ஒரு குழுவின் பரிந்துரையின்பேரில் ஆளுநரால் அமர்த்தப்படுதல் வேண்டும்,—

(i) முதலமைச்சர், அவர் இந்தக் குழுவின் தலைவராக இருப்பார்;

(ii) சட்டமன்றப் பேரவையின் எதிர்க்கட்சித் தலைவர்; மற்றும்

(iii) முதலமைச்சரால் நியமிக்கப்படும் அமைச்சர்.

**விளக்கம்.**— ஐயப்பாடுகளை அகற்றுவதற்காக, சட்டமன்றப் பேரவையில் எதிர்க்கட்சித் தலைவராக ஒருவர் ஏற்றுக்கொள்ளப்படாதிருக்கிறவிடத்து, சட்டமன்றப் பேரவையில் அரசாங்கத்திற்கு எதிர்க்கட்சியாகவுள்ள தனித்த பெருங்குழுவின் தலைவர், எதிர்க்கட்சித் தலைவராகக் கொள்ளப்படுதல் வேண்டும் என்று இதன்மூலம் விளம்பப்படுகிறது.

(4) மாநிலத் தகவல் ஆணையத்தின் பொதுக் கண்காணிப்பு, மேலாட்சி மற்றும் அலுவல் மேலாண்மை, மாநிலத் தலைமைத் தகவல் ஆணையரிடம் உற்றமைந்திருக்கும், அவருக்கு மாநிலத் தகவல் ஆணையர்கள் உதவியாக இருப்பர் மற்றும் இந்தச் சட்டத்தின்படியான பிற அதிகார அமைப்பு எதனின்

பணிப்புரைகளுக்கு உட்பட்டிராது தன்னாட்சி அமைப்பாக, மாநிலத் தகவல் ஆணையத்தினால் செலுத்தப்படலாகும் அதிகாரங்கள் அனைத்தையும் அவர் செலுத்தலாம் அல்லது செய்யலாகும் அனைத்துச் செயல்களையும் செய்யலாம் காரியங்களையும் புரியலாம்.

(5) மாநிலத் தலைமைத் தகவல் ஆணையர் மற்றும் மாநிலத் தகவல் ஆணையர்கள், சட்டம், அறிவியல், தொழில்நுட்பம், சமூக சேவை, மேலாண்மை, இதழியல், பொதுத் தொலைத் தொடர்பு அல்லது நிருவாகம், ஆட்சிமுறை இவற்றில் ஆழமான அறிவுத் திறமும் பட்டறிவும் கொண்டவர்களாக இருந்து பொது வாழ்வில் சிறப்புடையவர்களாக இருப்பர்.

(6) மாநிலத் தலைமைத் தகவல் ஆணையர் அல்லது மாநிலத் தகவல் ஆணையர், நாடாளுமன்றத்தின் ஓர் உறுப்பினராக அல்லது நேர்வுக்கேற்ப, மாநிலத்தின் அல்லது ஒன்றியத்து ஆட்சிநிலவரை ஏதொன்றின் சட்டமன்றத்தின் உறுப்பினராக அல்லது ஆதாயம் நல்கும் பிற பதவி எதனையும் வகிப்பவராக அல்லது அரசியல் கட்சி எதனையும் சார்ந்தவராக அல்லது வணிகம் எதனையும் அல்லது தொழில் எதனையும் செய்பவராக இருத்தல் ஆகாது.

(7) மாநிலத் தலைமைத் தகவல் ஆணையத்தின் தலைமையிடம், மாநில அரசாங்கம், அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாகக் குறித்துரைக்கலாகும், மாநிலத்திலுள்ள இடமாக இருத்தல் வேண்டும் மற்றும் மாநிலத் தகவல் ஆணையம், மாநில அரசாங்கத்தின் முன் ஒப்பேற்புடன், மாநிலத்திலுள்ள வேறு இடங்களில் தனது அலுவலகங்களை அமைத்துக் கொள்ளலாம்.

பதவிக் காலமும் பணி வரைக் கட்டுகளும்.

16. (1) மாநிலத் தலைமை தகவல் ஆணையர் தாம் பதவியேற்கும் தேதியிலிருந்து ஐந்தாண்டுகள் காலஅளவிற்குப் பதவி வகிப்பார் மற்றும் மறுமுறை அமர்த்தப்படுவதற்குத் தகுதியுடையவர் ஆகார்:

**வரம்புரையாக**: மாநிலத் தலைமைத் தகவல் ஆணையர் எவரும், தாம் அறுபத்தைந்து வயது நிறைவெய்திய பின்பு, பதவி வகித்தல் ஆகாது.

(2) மாநிலத் தகவல் ஆணையர் ஒவ்வொருவரும், தாம் பதவியேற்கும் தேதியிலிருந்து ஐந்தாண்டு காலஅளவிற்கு அல்லது தாம் அறுபத்தைந்து வயது நிறைவெய்தும் வரையில், இவற்றில் எது முந்தியதோ அதுவரையில், பதவி வகிப்பார் மற்றும் அத்தகைய மாநிலத் தகவல் ஆணையராக மறுமுறையும் அமர்த்தப்படுவதற்குத் தகுதியுடையவர் ஆகார்:

**வரம்புரையாக:** மாநிலத் தகவல் ஆணையர் ஒவ்வொருவரும், இந்த உட்பிரிவின்படி தம் பதவியை காலி செய்வதன் பேரில், 15 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட முறையில் மாநிலத் தலைமைத் தகவல் ஆணையராக அமர்த்தப்படுவதற்குத் தகுதியுடையவர் ஆவார்.

**மேலும் வரம்புரையாக:** மாநிலத் தகவல் ஆணையர், மாநிலத் தலைமைத் தகவல் ஆணையராக அமர்த்தப்படுகிறவிடத்து, மாநிலத் தகவல் ஆணையராகவும், மாநிலத் தலைமைத் தகவல் ஆணையராகவும் அவருடைய மொத்த பதவிக்காலம் ஐந்தாண்டுகளுக்கு மேற்படுதல் ஆகாது.

(3) மாநிலத் தலைமைத் தகவல் ஆணையர் அல்லது மாநிலத் தகவல் ஆணையர், தாம் பதவியேற்பதற்கு முன்பு, ஆளுநரின் அல்லது இதற்கென அவரால் அமர்த்தப்பட்ட எவரேனும் பிற நபரின் முன்பு, முதலாம் இணைப்புப் பட்டியலில் அதற்கென உள்ள படிவத்திற்கிணங்க ஆணைமொழி அல்லது உறுதிமொழி ஏற்று கையொப்பமிடுதல் வேண்டும்.

(4) மாநிலத் தலைமைத் தகவல் ஆணையர் அல்லது மாநிலத் தகவல் ஆணையர், எந்த நேரத்திலும் ஆளுநருக்குக் கையொப்பமிட்டு எழுத்துவழி பதவி விலகுவதாகத் தெரிவித்து தம் பதவியினை விட்டு விலகலாம்;

**வரம்புரையாக:** மாநிலத் தலைமைத் தகவல் ஆணையர் அல்லது மாநிலத் தகவல் ஆணையர், 17 ஆம் பிரிவின்படி குறித்துரைக்கப்பட்ட முறையில் பதவியிலிருந்து நீக்கப்படலாம்.

(5) (அ) மாநிலத் தலைமைத் தகவல் ஆணையருக்கு தேர்தல் ஆணையருக்கு வழங்கத்தக்க அதே போன்ற,

(ஆ) மாநிலத் தகவல் ஆணையருக்கு, மாநில அரசாங்கத்தின் தலைமைச் செயலாளருக்கு வழங்கத்தக்க அதேபோன்ற

வரையூதியங்களும், படித்தொகைகளும் வழங்கப்படுதலும் அதேபோன்ற பணிவரையுரைகளும் வரைக்கட்டுகளும் பொருந்துதலும் வேண்டும்;

**வரம்புரையாக:** மாநிலத் தலைமைத் தகவல் ஆணையர் அல்லது மாநில தகவல் ஆணையர், தாம் அமர்த்தப்படும் நேரத்தில், இந்திய அரசாங்கத்தில் அல்லது மாநில அரசாங்கத்தில் தாம் செய்த முந்தைய பணி எதனையும் பொறுத்து, ஏலாமைக்கான ஓய்வூதியம் அல்லது காயமுற்றதற்கான ஓய்வூதியம் அல்லாத பிற ஓய்வூதியம் எதனையும் பெறுவராயினும் மாநிலத் தலைமை தகவல் ஆணையர் அல்லது மாநிலத் தகவல் ஆணையர் என்ற பணி பொறுத்த அவரது வரையூதியம் தொகுத்துப் பெறப்பட்ட ஓய்வூதியத்தின் ஒரு பகுதி எதுவும் உள்ளடங்கலான, அந்த ஓய்வூதியத் தொகையும், ஓய்வூதிய பணிக்கொடைக்குச் சமமான ஓய்வூதியம் நீங்கலான, ஓய்வூதியத்தை ஒத்த பிறவகை ஓய்வூதிய நலப் பயன்களின் தொகையும் குறைக்கப்பட்டிருத்தல் வேண்டும்:

**மேலும் வரம்புரையாக:** மாநிலத் தலைமைத் தகவல் ஆணையர் அல்லது மாநிலத் தகவல் ஆணையர், தாம் அமர்த்தப்படும் நேரத்தில், ஏதேனும் மையச் சட்டத்தாலோ அல்லது மாநிலத் சட்டத்தாலோ அல்லது அதன் வழியாலோ நிறுவப்பட்ட கூட்டுருமம் ஒன்றில் அல்லது மைய அரசாங்கத்திற்கு அல்லது மாநில அரசாங்கத்திற்குச் சொந்தமான அல்லது அதன் கட்டாளுகையிலுள்ள அரசாங்க நிறுமம் ஒன்றில் செய்த முந்தையப் பணி எதுவும் பொறுத்த ஓய்வூதிய நலப்பயன்களைப் பெறுவாராயின், மாநிலத் தலைமைத் தகவல் ஆணையர் அல்லது மாநிலத் தகவல் ஆணையர் என்ற பணி பொறுத்த அவரது வரையூதியம் ஓய்வூதிய நலப்பயன்களுக்குச் சமமான ஓய்வூதியத் தொகையானது குறைக்கப்பட்டிருத்தல் வேண்டும்:

**இன்னும் வரம்புரையாக:** மாநிலத் தலைமைத் தகவல் ஆணையரின் அல்லது மாநிலத் தகவல் ஆணையரின் வரையூதியங்கள், படித்தொகைகள் மற்றும் பிற பணிவரைக்கட்டுகள், அவர்களுடைய அமர்த்தத்திற்குப் பின்பு, அவர்களுக்குப் பாதகமான வகையில் மாற்றப்படுதல் ஆகாது.

(6) இந்தச் சட்டத்தின்படி, மாநிலத் தலைமைத் தகவல் ஆணையர் மற்றும் மாநிலத் தகவல் ஆணையர்களுக்கு, தம்முடைய பதவிப் பணிகளைத் திறம்பட புரிவதற்காகத் தேவைப்படலாகும் அலுவலர்களையும், பணியாளர்களையும் மாநில அரசாங்கம் அளித்தல் வேண்டும் மற்றும் இந்தச் சட்டத்தின் நோக்கத்திற்காக அமர்த்தப்பட்ட அலுவலர்களுக்கும் மற்றும் பிற பணியாளர்களுக்கும் வழங்கப்படத்தக்க வரைவூதியங்களும் படித்தொகைகளும் மற்றும் பணிவரையுரைகளும் வரைக்கட்டுகளும் வகுத்துரைக்கப்படலாகிறவாறு இருத்தல் வேண்டும்.

மாநிலத் தலைமைத் தகவல் ஆணையரை அல்லது மாநிலத் தகவல் ஆணையரை நீக்குதல்.

17. (1). (3)ஆம் உட்பிரிவின் வகைமுறைகளுக்கு உட்பட்டு, ஆளுநரால் உச்ச நீதிமன்றத்திற்குச் சுட்டியனுப்பப்படுவதன் பேரில் மெய்ப்பிக்கப்பட்ட தவறான நடத்தை அல்லது திறமையின்மையின் காரணத்தின்பேரில் மாநிலத் தலைமைத் தகவல் ஆணையர் அல்லது நேர்வுக்கேற்ப, மாநிலத் தகவல் ஆணையர் நீக்கப்படுதல் வேண்டும் என்று அறிவிக்கை செய்த பின்பு, ஆளுநரின் ஆணையினால் மட்டுமே மாநிலத் தலைமைத் தகவல் ஆணையர் அல்லது மாநிலத் தகவல் ஆணையர் அத்தகைய காரணத்தின்பேரில், தம் பதவியிலிருந்து நீக்கப்படுதல் வேண்டும்.

(2) ஆளுநர், (1) ஆம் உட்பிரிவின்படி உச்ச நீதிமன்றத்திற்கு எவர் பொறுத்துச் சுட்டியனுப்பப்பட்டதோ அந்த மாநிலத் தலைமைத்

தகவல் ஆணையரை அல்லது மாநிலத் தகவல் ஆணையரை, அத்தகைய சுட்டியனுப்புகையின் பேரிலான உச்ச நீதிமன்றத்தின் அறிக்கையின் பேரில், ஆளுநரால் ஆணைகள் பிறப்பிக்கப்படும் வரையில், பதவியிலிருந்து தற்காலிகமாக நிறுத்திவைக்கலாம் மற்றும் தேவையெனக் கருதுவாராயின், விசாரணையின்போது அலுவலகத்திற்கு வருகை புரிவதையும்கூட தடைசெய்யலாம்.

(3). (1) ஆம் உட்பிரிவில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், மாநிலத் தலைமைத் தகவல் ஆணையர் அல்லது, நேர்வுக்கேற்ப, மாநிலத் தகவல் ஆணையர்,—

(அ) நொடிப்பு நிலையாளராகத் தீர்ப்பளிக்கப்படுவாராயின், அல்லது

(ஆ) ஆளுநரின் கருத்தின்படி, எந்தக் குற்றச் செயல் ஒழுக்கக்கேட்டினை உள்ளடக்கிய குற்றச்செயலாக உள்ளதோ அந்தக் குற்றத்திற்காகத் தண்டனை பெற்றிருந்திருப்பாராயின் அல்லது

(இ) தம் பதவிக் காலத்தின்போது, தமது பதவிக்குரிய கடமைகளுக்கு வெளியே சம்பளம் பெறும் வேலை எதிலும் ஈடுபட்டிருப்பாராயின், அல்லது

(ஈ) ஆளுநரின் கருத்தின்படி, மனத் தளர்ச்சி அல்லது உடல் தளர்ச்சி காரணமாக பதவியில் தொடர்ந்திருப்பதற்குத் தகுதியற்றவராக இருப்பாராயின், அல்லது

(உ) மாநிலத் தலைமைத் தகவல் ஆணையர் அல்லது மாநிலத் தகவல் ஆணையர் என்ற முறையில் தமது பதவிப் பணிகளுக்குக் குந்தகம் விளைவிக்கக்கூடிய நிதி அல்லது பிற நலனைப் பெற்றிருப்பாராயின்

ஆளுநர் ஆணைவாயிலாக, மாநிலத் தலைமைத் தகவல் ஆணையரை அல்லது மாநிலத் தகவல் ஆணையரைப் பதவியிலிருந்து நீக்கலாம்.

(4) மாநிலத் தலைமைத் தகவல் ஆணையர் அல்லது மாநிலத் தகவல் ஆணையர், எந்தவகையிலும், மாநில அரசாங்கத்தினால் அல்லது அதன் சார்பாகச் செய்யப்படும் ஒப்பந்தம் அல்லது உடன்பாடு எதிலும் தொடர்புடையவராக அல்லது உரித்தமுடையவராக இருப்பாராயின் அல்லது உறுப்பினர் என்ற முறையில் அல்லது பிறவாறு அதிலிருந்து கிடைக்கக்கூடிய ஆதாயத்தை அல்லது நலப்பயனை அல்லது பதவியூதியத்தை, எந்த வகையிலும் ஒரு கூட்டுரும நிறுமத்தின் உறுப்பினர்கள் அல்லாத பிறர் போன்று பெறுவாராயின், அவர் (1) ஆம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, தவறான நடத்தைக் குற்றம் செய்தவராகக் கருதப்படுவார்.

## அத்தியாயம் V

## தகவல் ஆணையங்களுக்குரிய அதிகாரங்களும், பதவிப்பணிகளும், மேல்முறையீடு மற்றும் தண்டனைகள்

தகவல் ஆணையங்களுக்குரிய அதிகாரங்களும் பதவிப் பணிகளும்.

18. (1) இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு உட்பட்டு,—

(அ) இந்தச் சட்டத்தின்படி மையப் பொதுத் தகவல் அலுவலர் அல்லது நேர்வுக்கேற்ப, மாநிலப் பொதுத் தகவல் அலுவலர் எவரும் அமர்த்தப்படாத காரணத்தினால், அல்லது 19 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட மையப் பொதுத் தகவல் அலுவலருக்கு அல்லது மாநிலப் பொதுத் தகவல் அலுவலருக்கு அல்லது முதுநிலை அலுவலருக்கு அதனை அனுப்புவதற்காக இந்தச் சட்டத்தின்படி **அவரால்** அல்லது **அவளால்** செய்யப்படும் தகவலுக்கான விண்ணப்பம் அல்லது மேல்முறையீட்டினை ஏற்பதற்கு மைய உதவிப் பொதுத் தகவல் அலுவலர் அல்லது மாநில உதவிப் பொதுத் தகவல் அலுவலர் அல்லது

மைய தகவல் ஆணையம் அல்லது, நேர்வுக்கேற்ப, மாநிலத் தகவல் ஆணையம் மறுப்பதினால் அத்தகைய அலுவலருக்குத் தகவலுக்கான கோரிக்கையை அனுப்ப முடியாதிருக்கிற நபர் எவரிடமிருந்தும்,

(ஆ) இந்தச் சட்டத்தின்படி கோரப்பட்ட தகவல் எதனையும் பெறுவதற்கு மறுக்கிற நபர் எவரிடமிருந்தும்,

(இ) இந்தச் சட்டத்தின்படி குறித்துரைக்கப்பட்ட காலவரம்பிற்குள் தகவல் பெறுவதற்கான கோரிக்கை அல்லது தகவல் பெறுவதற்கான வாய்ப்புக்கு பதில் அளிக்கப்படாதிருக்கிற நபர் எவரிடமிருந்தும்,

(ஈ) அவர் அல்லது அவள் செலுத்துமாறு வேண்டுறுத்தப்பட்ட கட்டணத்தினை, நியாயமற்றது என்று கருதுகிற நபர் எவரிடமிருந்தும்,

(உ) அவர் அல்லது அவளுக்கு, இந்தச் சட்டத்தின்படி முழுமையல்லாத, தவறான அல்லது பொய்யானத் தகவல் அளிக்கப்பட்டுள்ளது என நம்புகிற நபர் எவரிடமிருந்தும்,

(ஊ) இந்தச் சட்டத்தின்படி பதிவுருக்களைப் பெறுவதற்கான கோரிக்கை அல்லது பதிவுருக்களைப் பெறும் வாய்ப்பு பொறுத்த பிற பொருட்பாடு எதுவும் தொடர்பான நபர் எவரிடமிருந்தும்

முறையீடு ஒன்றினைப் பெறுவது அல்லது அதனை விசாரிப்பது மையத் தகவல் ஆணையத்தின் அல்லது நேர்வுக்கேற்ப, மாநிலத் தகவல் ஆணையத்தின் கடமையாகும்.

(2) மையத் தகவல் ஆணையம் அல்லது நேர்வுக்கேற்ப, மாநிலத் தகவல் ஆணையம், அந்தப் பொருட்பாட்டினை விசாரிப்பதற்கு நியாயமான காரணங்கள் இருக்கிறதென்று தெளிவுறக்காணுமிடத்து, அது பொறுத்த விசாரணையைத் தொடங்கலாம்.

(3) மையத் தகவல் ஆணையம் அல்லது நேர்வுக்கேற்ப, மாநிலத் தகவல் ஆணையம், இந்தப் பிரிவின் படியான பொருட்பாடு எதனையும் விசாரிக்கையில்
5/1908 பின்வரும் பொருட்பாடுகள் பொறுத்து, 1908ஆம் ஆண்டு உரிமையியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டத்தின்படி உரிமை வழக்கினை விசாரிக்கையில், உரிமை வழக்கு நீதிமன்றத்திடம் உள்ளமைந்துள்ள அதே அதிகாரங்களை உடையது ஆகும் அவையாவன:—

(அ) நபர்களுக்கு ஆஜராகுமாறு அழைப்பாணை விடுத்தல் மற்றும் வலியுறுத்துதல் மற்றும் அவர்களை ஆணைமொழியின் பேரில் வாய்மொழியாக அல்லது எழுத்துவழியாகச் சான்று அளிக்குமாறும், தம்மிடமுள்ள ஆவணங்கள் மற்றும் பொருட்களை முன்னிலைப்படுத்துமாறும் கட்டாயப்படுத்துதல்;

(ஆ) ஆவணங்களை வெளிக் கொணர்வதற்கும் ஆய்வு செய்வதற்கும் வேண்டுறுத்துதல்;

(இ) ஆணையுறுதி ஆவணத்தின் பேரிலான சான்றினைப் பெறுதல்;

(ஈ) நீதிமன்றம் அல்லது அலுவலகம் எதிலிருந்தும் பொதுப் பதிவுரு எதனையும் அல்லது அதன் படிகள் எவற்றையும் கோரிப் பெறுதல்;

(உ) சாட்சிகளை விசாரிப்பதற்கு அல்லது ஆவணங்களை ஆய்வு செய்வதற்கு அழைப்பாணை விடுத்தல்;

(ஊ) வகுத்துரைக்கப்படலாகும் பிற பொருட்பாடு எதுவும்.

(4) நாடாளுமன்றத்தின் அல்லது நேர்வுக்கேற்ப, மாநிலச் சட்டமன்றத்தின் பிற சட்டம் எதிலும் அடங்கியுள்ளதற்கு முரணாகவுள்ள எது எவ்வாறிருப்பினும், மையத் தகவல் ஆணையம் அல்லது நேர்வுக்கேற்ப, மாநிலத் தகவல் ஆணையம்

இந்தச் சட்டத்தின்படியான முறையீடு எதனையும் விசாரணை செய்யும்போது, பொது அதிகாரஅமைப்பின் கட்டுப்பாட்டின்கீழ் இருக்கிறதும், இந்தச் சட்டம் பொருந்துகிறதுமான பதிவுரு எதனையும் சோதனையிடலாம், ஆய்வு செய்யலாம் மற்றும் அத்தகைய பதிவுரு எதுவும், எந்தக் காரணங்களின் பொருட்டும் நிறுத்தி வைக்கப்படுதல் ஆகாது.

மேல்முறையீடு.

19. (1). 7ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் அல்லது (3) ஆம் உட்பிரிவின் (அ) கூறில் குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குள் முடிபினை பெறாதிருக்கிற அல்லது மையப் பொதுத் தகவல் அலுவலரின் அல்லது நேர்வுக்கேற்ப, மாநிலப் பொதுத் தகவல் அலுவலரின் முடிபினால் குறையுற்ற நபர் எவரும், அத்தகைய காலம் கழிவுற்றதிலிருந்து அல்லது அத்தகைய முடிபினைப் பெற்றதிலிருந்து முப்பது நாட்களுக்குள், ஒவ்வொரு பொது அதிகாரஅமைப்பிலும் உள்ள மையப் பொதுத் தகவல் அலுவலரின் அல்லது நேர்வுக்கேற்ப மாநிலப் பொதுத் தகவல் அலுவலரின் படிநிலைக்கு முதுநிலையிலுள்ள அலுவலருக்கு மேல்முறையீட்டினைத் தாக்கல் செய்யலாம்:

**வரம்புரையாக**: அத்தகைய அலுவலர், அவர் அல்லது அவள், மேல்முறையீட்டாளர் உரிய காலத்தில் மேல்முறையீட்டைத் தாக்கல் செய்வதிலிருந்து போதிய காரணத்தால் தடுக்கப்பட்டிருந்தார் என்று தெளிவுறக் காண்பாராயின், முப்பது நாட்கள் காலம் கழிவுற்ற பின்பும், மேல்முறையீட்டினை ஏற்றுக்கொள்ளலாம்.

(2) மூன்றாம் தரப்புத் தகவலை வெளிப்படுத்துவதற்கு, 11ஆம் பிரிவின்படி மையப் பொதுத் தகவல் அலுவலரால் அல்லது, நேர்வுக்கேற்ப, மாநிலப் பொதுத் தகவல் அலுவலரால் பிறப்பிக்கப்பட்ட ஆணைக்கு எதிராக மேல்முறையீடு ஒன்று தாக்கல் செய்யப்படுகிறவிடத்து, தொடர்புடைய மூன்றாம் தரப்பினரின் அந்த மேல்முறையீடு, ஆணைத் தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் செய்யப்படுதல் வேண்டும்.

(3) அந்த முடிபு எடுக்கப்பட்ட அல்லது உள்ளபடியே அது பெறப்பட்ட தேதியிலிருந்து தொண்ணூறு நாட்களுக்குள், மையத் தகவல் ஆணையத்திடம் அல்லது மாநிலத் தகவல் ஆணையத்திடம், (1) ஆம் உட்பிரிவின்படியான முடிபிற்கு எதிராக இரண்டாம் மேல்முறையீடு செய்வதற்கான உரிமை உண்டு:

**வரம்புரையாக**: மையத் தகவல் ஆணையம் அல்லது, நேர்வுக்கேற்ப, மாநிலத் தகவல் ஆணையம், மேல்முறையீட்டாளர் உரிய காலத்தில் மேல்முறையீட்டைத் தாக்கல் செய்வதிலிருந்து போதிய காரணத்தினால் தடுக்கப்பட்டிருந்தார் என்று தெறிவுறக்காணுமாயின், தொண்ணூறு நாள் காலஅளவு கழிவுற்றபின்பு மேல்முறையீட்டினை ஏற்றுக்கொள்ளலாம்.

(4) மூன்றாம் தரப்பினரின் தகவல் தொடர்பாகத் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டிற்கு எதிராக, மையப் பொதுத் தகவல் அலுவலரின் அல்லது, நேர்வுக்கேற்ப, மாநிலப் பொதுத் தகவல் அலுவலரின் முடிபு இருக்குமாயின், மையத் தகவல் ஆணையம் அல்லது மாநிலத் தகவல் ஆணையம், மூன்றாம் தரப்பினருக்குக் கேட்கப்படுவதற்கு நியாயமான வாய்ப்பு ஒன்றினை நல்குதல் வேண்டும்.

(5) மேல்முறையீட்டு நடவடிக்கைகள் எவற்றிலும் கோரிக்கையின் மறுப்பு நியாயமானது என்று மெய்ப்பிக்கும் பொறுப்பு, எவர் கோரிக்கையை மறுக்கிறாரோ, அந்த மையப் பொதுத் தகவல் அலுவலரை அல்லது அந்த மாநிலப் பொதுத் தகவல் அலுவலரைச் சார்ந்ததாகும்.

(6). (1)ஆம் உட்பிரிவின் அல்லது (2)ஆம் உட்பிரிவின்படியான மேல்முறையீடானது, எழுதிப் பதிவு செய்யப்படவேண்டிய காரணங்களுக்காக மேல்முறையீடு பெறப்பட்டதிலிருந்து முப்பது நாட்களுக்குள் அல்லது, நேர்வுக்கேற்ப, அது, தாக்கல் செய்யப்பட்ட தேதியிலிருந்து மொத்தம் நாற்பத்தைந்து நாட்களுக்கு மேற்படாது நீட்டிக்கப்பட்ட காலஅளவிற்குள் முடிவு செய்யப்படுதல் வேண்டும்.

(7) மையத் தகவல் ஆணையத்தின் அல்லது, நேர்வுக்கேற்ப, மாநிலத் தகவல் ஆணையத்தின் முடிபு, கட்டுப்படுத்துவதாக இருக்கும்.

167

(8) மையத் தகவல் ஆணையம் அல்லது, நேர்வுக்கேற்ப, மாநிலத் தகவல் ஆணையம், தன்னுடைய முடிபில்,—

(அ) (i) அவ்வாறு வேண்டுறுத்தப்படுமாயின், குறிப்பிட்ட வடிவத்தில் தகவல் பெறும் வாய்ப்பு அளித்தல்.

(ii) மையப் பொதுத் தகவல் அலுவலரை அல்லது, நேர்வுக்கேற்ப, மாநிலப் பொதுத் தகவல் அலுவலரை அமர்த்துதல்,

(iii) குறித்தசில தகவலை அல்லது தகவலின் வகைகளை வெளியிடுதல்,

(iv) பதிவுருக்களை பேணி வருதல், மேலாண்மை செய்தல் மற்றும் அழித்தல்.

(v) தன்னுடைய அலுவலர்களுக்குத் தகவல் பெறும் உரிமை குறித்த பயிற்சியினை விரிவுபடுத்த வகை செய்தல்,

(vi) 4 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) கூறுக்கு இணங்க ஆண்டறிக்கை தயாரிக்க வகை செய்தல்

உள்ளடங்கலாக, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு இணங்கி இருக்குமாறு செய்யத் தேவையாகலாகும் நடவடிக்கைகளை எடுக்குமாறு பொது அதிகார அமைப்பினை வேண்டுறுத்தும் அதிகாரம் உடையது ஆகும்.

(ஆ) இழப்பு அல்லது பாதிப்புண்டாக்கிய பிற கேடு எதற்காகவும் முறையீட்டாளருக்கு நஷ்டயீடு வழங்குமாறு பொது அதிகாரஅமைப்பை வேண்டுறுத்தும் அதிகாரம் உடையது ஆகும்.

(இ) இந்தச் சட்டத்தின்படி வகை செய்யப்பட்ட தண்டனைகளில் எதனையும் விதிக்கும் அதிகாரம் உடையது ஆகும்.

(ஈ) விண்ணப்பத்தினை ஏற்க மறுக்கும் அதிகாரம், உடையது ஆகும்.

(9) மையத் தகவல் ஆணையம் அல்லது, நேர்வுக்கேற்ப மாநிலத் தகவல் ஆணையம், மேல்முறையீடு செய்ததற்கான உரிமை உள்ளடங்கலாக முறையீட்டாளருக்கும், பொது அதிகாரஅமைப்பிற்கும் தன்னுடைய முடிபு குறித்த அறிவிப்பினைக் கொடுத்தல் வேண்டும்.

(10) மையத் தகவல் ஆணையம் அல்லது, நேர்வுக்கேற்ப, மாநிலத் தகவல் ஆணையம், வகுத்துரைக்கப்படலாகும் நடைமுறைக்கிணங்க மேல்முறையீட்டினை முடிபு செய்தல் வேண்டும்.

தண்டனைகள்.

20. (1) மையத் தகவல் ஆணையம் அல்லது, நேர்வுக்கேற்ப, மாநிலத் தகவல் ஆணையம், முறையீடு அல்லது மேல்முறையீடு எதனையும் தீர்மானிக்கிற நேரத்தில், 7ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின்படி குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குள் நியாயமான காரணம் எதுவுமின்றி, தகவலுக்கான விண்ணப்பம் ஒன்றினைப் பெறுவதற்கு மையப் பொதுத் தகவல் அலுவலர் அல்லது, நேர்வுக்கேற்ப, மாநிலப் பொதுத் தகவல் அலுவலர் மறுக்கிறார் அல்லது தகவலை அளிக்க மறுக்கிறார் என்று கருதுகிறவிடத்து, அல்லது தகவலுக்கான கோரிக்கையினை கெட்ட எண்ணத்துடன் மறுக்கிறார் என்று அல்லது தவறான, முழுமையற்ற, அல்லது திசை திருப்பக்கூடிய தகவலினை வேண்டுமென்றே அளிக்கிறார் என்று அல்லது கோரிக்கையின் பொருளாக இருந்த தகவலை அழிக்கிறார் என்று அல்லது தகவல் அளிப்பதை எந்த முறையிலும் தடுக்கிறார் என்று கருதுகிறவிடத்து, அந்த விண்ணப்பம் பெறப்படும் வரை அல்லது தகவல் அளிக்கப்படும் வரை, ஒவ்வொரு நாளுக்கும், இருநூற்று ஐம்பது ரூபாயினை பணத்தண்டமாக விதித்தல் வேண்டும்; எனினும், மொத்தத் தண்டத் தொகையானது இருபத்தைந்து ஆயிரத்திற்கு மேற்படுதல் ஆகாது:

**வரம்புரையாக:** மையப் பொதுத் தகவல் ஆணையருக்கு அல்லது, நேர்வுக்கேற்ப, மாநிலப் பொதுத் தகவல் ஆணையருக்கு தண்டம் எதுவும் விதிக்கப்படுவதற்கு முன்பு, கேட்கப்படுவதற்கு நியாயமான வாய்ப்பு ஒன்று அளிக்கப்படுதல் வேண்டும்:

**மேலும் வரம்புரையாக:** மையப் பொதுத் தகவல் அலுவலர் அல்லது, நேர்வுக்கேற்ப, மாநிலப் பொதுத் தகவல் அலுவலர் நியாயமாகவும் கவனத்துடனும் செயற்பட்டுள்ளார் என்பதை மெய்ப்பிக்கும் சுமையானது அவரையே சார்ந்ததாகும்.

(2) முறையீடு அல்லது மேல்முறையீடு எதனையும் தீர்மானிக்கிற நேரத்தில், மையப் பொதுத் தகவல் அலுவலர் அல்லது, நேர்வுக்கேற்ப, மாநிலப் பொதுத் தகவல் அலுவலர் நியாயமான காரணம் எதுவுமின்றியும், விடாப்பிடியாகவும் 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குள் தகவலுக்கான விண்ணப்பம் ஒன்றினைப் பெறத்தவறுகிறார் அல்லது தகவலை அளிக்காதிருக்கிறார் அல்லது தகவலுக்கான கோரிக்கையினை கெட்ட எண்ணத்துடன் மறுக்கிறார் அல்லது தவறான, முழுமையற்ற அல்லது திசை திருப்பக்கூடிய தகவலை வேண்டுமென்றே அளிக்கிறார் அல்லது கோரிக்கையின் பொருளாக இருந்த தகவலினை அழிக்கிறார் அல்லது தகவலை அளிப்பதை எந்தமுறையிலும் தடுக்கிறார் என்று மையத்தகவல் ஆணையம், அல்லது நேர்வுக்கேற்ப, மாநிலத் தகவல் ஆணையம் கருதுகிறவிடத்து, அது மையப் பொதுத் தகவல் அலுவலர் அல்லது, நேர்வுக்கேற்ப, மாநிலப் பொதுத் தகவல் அலுவலருக்கு எதிராக அவருக்குப் பொருந்தத்தக்க பணிவிதிகளின்படி ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப் பரிந்துரை செய்தல் வேண்டும்.

## அத்தியாயம் VI

## பல்வகைப்பட்டவை

நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு.

21. இந்தச் சட்டத்தின்படியோ அல்லது அதன்படி செய்யப்பட்ட விதிகள் எதன்படியுமோ நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட அல்லது செய்யக் கருதப்பட்ட எதற்காகவும், நபர் எவருக்கும் எதிராக உரிமை வழக்கு, குற்ற வழக்கு அல்லது பிற சட்ட நடவடிக்கை எதுவும் தொடரப்படுதல் ஆகாது.

சட்டம் மீதூர்ந்து இயங்கும் தன்மையது ஆகும்.

22. 1923ஆம் ஆண்டு அலுவலக மறையங்கள் சட்டத்திலும் மற்றும் அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள பிற சட்டம் எதிலும், இந்தச் சட்டம் அல்லாத பிற சட்டம் எதனின் பயன் திறனால் செயற்பாட்டில் உள்ள பிற முறையாவணம் எதிலும் முரணாக என்ன அடங்கியிருந்த போதிலும், இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் மீதூர்ந்து இயங்கும் தன்மையது ஆகும். 19/19

நீதிமன்றங்களின அதிகார வரம்புக்குத் தடை.

23. இந்தச் சட்டத்தின்படி பிறப்பிக்கப்பட்ட ஆணை எது தொடர்பாகவும், உரிமை வழக்கு, விண்ணப்பம் அல்லது பிற நடவடிக்கை எதனையும் நீதிமன்றம் எதுவும் ஏற்றுக்கொள்ளுதல் ஆகாது மற்றும் இந்தச் சட்டத்தின்படி ஒரு மேல்முறையீடு என்னும் வகையில் அன்றி, பிறவாறு அத்தகைய ஆணை எதுவும் மறுத்து வாதிடப்படுதல் ஆகாது.

குறித்தசில நிறுவனங்களுக்கு இந்தச் சட்டம் பொருந்துதல ஆகாது.

24. (1) இந்தச் சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும், இரண்டாம் இணைப்புப்பட்டியலில் குறித்துரைக்கப்பட்டு, மைய அரசாங்கத்தால் நிறுவப்பட்ட நிறுவனங்களாக இருக்கிற புலனாய்வு மற்றும் பாதுகாப்பு அமைப்புகளுக்கு அல்லது அந்த அரசாங்கத்திற்கு அத்தகைய நிறுவனங்களால் அளிக்கப்படும் தகவல் எதற்கும் பொருந்துதல் ஆகாது:

**வரம்புரையாக:** ஊழல் குறித்த சாட்டுரைகள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான தகவல் இந்த உட்பிரிவின்படி நீக்கப்படுதல் ஆகாது:

**மேலும் வரம்புரையாக:** மனித உரிமைகள் மீறல் குறித்த சாட்டுரைகள் தொடர்பான தகவலைப் பொறுத்தவரை, தகவலானது, மையத் தகவல் ஆணையத்தின் ஒப்பேற்புக்குப் பின்னர் மட்டுமே அளிக்கப்படுதல் வேண்டும் மற்றும் 7ஆம் பிரிவில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், அத்தகையத் தகவல், கோரிக்கைப் பெறப்பட்ட நாளிலிருந்து நாற்பத்தைந்து நாட்களுக்குள் அளிக்கப்படுதல் வேண்டும்.

(2) மைய அரசாங்கம், அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக இணைப்புப்பட்டியலை, அந்த அரசாங்கத்தால் நிறுவப்பட்ட பிற புலனாய்வு அல்லது பாதுகாப்பு அமைப்பு எதனையும் அதில் சேர்ப்பதன் மூலம் அல்லது

169

அதில் ஏற்கெனவே குறித்துரைக்கப்பட்ட அமைப்பு எதனையும் அதிலிருந்து நீக்குவதன் மூலம் திருத்தம் செய்யலாம் மற்றும் அத்தகைய அறிவிக்கையை வெளியிடுவதன்பேரில், அத்தகைய அமைப்பு அந்த இணைப்புப்பட்டியலில் சேர்க்கப்பட்டதாக அல்லது நேர்வுக்கேற்ப, அதிலிருந்து நீக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

*(3).* *(2)* ஆம் உட்பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை ஒவ்வொன்றும், நாடாளுமன்ற அவை ஒவ்வொன்றின் முன்பும் வைக்கப்படுதல் வேண்டும்.

*(4).* இந்தச் சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும், மாநில அரசாங்கத்தால் நிறுவப்பட்டதும், அந்த அரசாங்கத்தால், அவ்வப்போது, அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாகக் குறித்துரைக்கலாகிறதுமான அமைப்புகளாக இருக்கிற புலனாய்வு மற்றும் பாதுகாப்பு அமைப்பிற்குப் பொருந்துதல் ஆகாது:

**வரம்புரையாக**: ஊழல் குறித்த சாட்டுரைகள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான தகவல் இந்த உட்பிரிவின்படி நீக்கப்படுதல் ஆகாது:

**மேலும் வரம்புரையாக:** மனித உரிமைகள் மீறல் குறித்த சாட்டுரைகள் தொடர்பான தகவலைப் பொறுத்தவரை, தகவலானது, மாநிலத் தகவல் ஆணையத்தின் ஒப்பேற்புக்குப் பின்னர் மட்டுமே அளிக்கப்படுதல் வேண்டும் மற்றும் 7 ஆம் பிரிவில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், அத்தகையத் தகவல், கோரிக்கை பெறப்பட்ட நாளிலிருந்து நாற்பத்தைந்து நாட்களுக்குள் அளிக்கப்படுதல் வேண்டும்.

*(5).* *(4)*ஆம் உட்பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை ஒவ்வொன்றும், மாநிலச் சட்டமன்றம் முன் வைக்கப்படுதல் வேண்டும்.

கண்காணிப்பும் அறிக்கையும்.

25. *(1)* மையத் தகவல் ஆணையம் அல்லது, நேர்வுக்கேற்ப, மாநிலத் தகவல் ஆணையம் நடைமுறையில் கூடுமான விரைவில், ஒவ்வோர் ஆண்டின் முடிவுக்குப் பின்பு, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளைச் செயற்படுத்துவது தொடர்பான அறிக்கையை அந்த ஆண்டின்போது தயாரித்து, அதன் படியினை உரிய அரசாங்கத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

*(2)* அமைச்சகம் அல்லது துறை ஒவ்வொன்றும், தம்முடைய அதிகார வரம்பிற்குள் உள்ள பொது அதிகாரஅமைப்புகள் தொடர்பாக, இந்தப் பிரிவின்படியான அறிக்கையைத் தயார் செய்வதற்கு வேண்டுறுத்தப்பட்டவாறானத் தகவலைச் சேகரித்து மையத் தகவல் ஆணையத்திற்கு அல்லது, நேர்வுக்கேற்ப, மாநிலத் தகவல் ஆணையத்திற்கு அளித்தல் வேண்டும் மற்றும் அந்தத் தகவலை அளித்தல் தொடர்பான வேண்டுறுத்தங்களுக்கு இணங்கி நடத்தல் வேண்டும் மற்றும் இந்தப் பிரிவின் நோக்கங்களுக்காகப் பதிவுருக்களை வைத்து வருதல் வேண்டும்.

*(3)* அறிக்கை ஒவ்வொன்றும், அந்த அறிக்கை எந்த ஆண்டு தொடர்பானது என்பதையும், பின்வருவனவற்றையும் உரைத்தல் வேண்டும்:—

*(அ)* பொது அதிகாரஅமைப்பு ஒவ்வொன்றிற்கும் செய்யப்பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை;

*(ஆ)* அந்தக் கோரிக்கைகள் பொறுத்த ஆவணங்களைப் பெறுவதற்கு விண்ணப்பதாரர்கள் உரிமை கொண்டிராதவர்களாக இருப்பதாக முடிபு செய்யப்படுகிறதோ அந்த முடிபுகளின் எண்ணிக்கை, இந்தச் சட்டத்தின் எந்த வகைமுறைகளின்படி அந்த முடிபுகள் செய்யப்பட்டனவோ அந்த வகைமுறைகள், மற்றும் அத்தகைய வகைமுறைகள் எத்தனை முறை பயன்படுத்தப்பட்டனவோ அவற்றின் எண்ணிக்கை;

*(இ)* மறு ஆய்வுக்காக, மையத் தகவல் ஆணையத்திற்கு அல்லது, நேர்வுக்கேற்ப, மாநிலத் தகவல் ஆணையத்திற்கு சுட்டியனுப்பப்பட்ட மேல்முறையீடுகளின் எண்ணிக்கை, மேல்முறையீடுகளின் தன்மை, மற்றும் மேல்முறையீடுகளின் பலன்;

*(ஈ)* இந்தச் சட்டத்தினைப் பயன்படுத்தி அலுவலர் எவருக்கும் எதிராக எடுக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை எதனின் விவரங்கள்;

(உ) இந்தச் சட்டத்தின்படி பொது அதிகார அமைப்பு ஒவ்வொன்றினாலும் வசூலிக்கப்பட்ட கட்டணத்தொகை.

(ஊ) இந்தச் சட்டத்தின் நோக்கம் மற்றும் உட்கருத்தின் பயன்பாடு மற்றும் நிறைவேற்றம் குறித்து பொது அதிகார அமைப்புகளால் முயற்சியினை குறித்துரைக்கிற பொருண்மைகள் எவையும்;

(எ) வளர்ச்சி, மேம்பாடு, நவீனமயமாக்கல், சீர்திருத்தம் அல்லது இந்தச் சட்டம் அல்லது பிற சட்டம் அல்லது பொதுச் சட்டத்தினை திருத்துவதற்காக அல்லது தகவலைப் பெறுவதற்கான உரிமையை செயற்படுத்துவதற்காக தொடர்புள்ள பிற பொருட்பாடு எதற்காகவும் குறிப்பிட்ட பொது அதிகாரஅமைப்புகள் பொறுத்த பரிந்துரைகள் உள்ளடங்கலான சீர்திருத்தத்திற்கான பரிந்துரைகள்.

(4) மைய அரசாங்கம் அல்லது, நேர்வுக்கேற்ப, மாநில அரசாங்கம், நடைமுறையில் கூடுமான விரைவில், ஒவ்வோர் ஆண்டின் முடிவுக்குப் பின்பு (1) ஆம் உட்பிரிவில் சுட்டப்பட்ட மையத் தகவல் ஆணையத்தின் அல்லது நேர்வுக்கேற்ப, மாநிலத் தகவல் ஆணையத்தின்அறிக்கையின் படியினை, நாடாளுமன்ற அவை ஒவ்வொன்றின் முன்பும் அல்லது, நேர்வுக்கேற்ப, இரண்டு அவைகள் இருக்கிற மாநிலச் சட்டமன்றந்தில் அவை ஒவ்வொன்றின்முன்பும், மற்றும் ஒரு அவை மட்டுமே இருக்கிற மாநிலச் சட்டமன்றத்தில் அந்த அவையின் முன்பும் வைக்கப்படுமாறு செய்யலாம்.

(5) பொது அதிகாரஅமைப்பு இந்தச் சட்டத்தின்படியான தனது அலுவற்பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு அல்லது நோக்கத்திற்கு இணங்கி நடக்கவில்லை என்று மையத் தகவல் ஆணையத்திற்கு அல்லது, நேர்வுக்கேற்ப, மாநிலத் தகவல் ஆணையத்திற்கு தோன்றுமாயின், அது, அத்தகைய இணக்கம் ஏற்படுவதற்காக, தனது கருத்துப்படி எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகளை குறித்துரைக்கின்ற பரிந்துரையினை அந்த அதிகாரஅமைப்பிற்கு வழங்கலாம்.

உரிய அரசாங்கம் திட்டங்களைத் தயாரித்தல்.

26. (1) உரிய அரசாங்கம், நிதி மற்றும் பிற ஆதாரங்கள் கிடைக்கத்தக்க அளவிற்கு—

(அ) இச்சட்டத்தில் கருதப்பட்டுள்ள உரிமைகளை செயல்படுத்தும் விதம் குறித்து பொதுமக்களின் அறிந்துகொள்ளும் தன்மையை, குறிப்பாக, பாதகப்பட்ட சமுதாயத்தினரின் அறிந்துக்கொள்ளும் தன்மையை முன்னேற்றும் விதமாகக் கல்வித் திட்டங்களை உருவாக்கி ஒருங்கிணைக்கலாம்.

(ஆ). (அ) கூறில் சுட்டப்பட்ட திட்டங்களை விவரிப்பதிலும் இணைத்து உருவாக்குவதிலும் பொது அதிகார அமைப்புகளை பங்குகொள்ளச் செய்வதையும் அவைகளையே அத்திட்டங்களை மேற்கொள்ளச் செய்வதிலும் அப்போது அதிகார அமைப்புகளுக்கு ஆதரவு அளிக்கலாம்;

(இ) பொது அதிகாரஅமைப்புகளின் செயற்பாடுகள் பற்றி துல்லியமான தகவலினை, உரிய நேரத்திலும் பயனுள்ள முறையிலும் பரப்புதலை ஊக்குவிக்கலாம்; மற்றும்

(ஈ) பொது அதிகாரஅமைப்புகளின் மையப் பொதுத் தகவல் அலுவலருக்கு அல்லது, நேர்வுகேற்ப, மாநிலப் பொதுத் தகவல் அலுவலருக்குப் பயிற்சி அளிக்கலாம் மற்றும் பொது அதிகாரஅமைப்புகள் தாமே பயன்படுத்துவதற்காக தொடர்புடைய பயிற்சிப் பொருட்களைத் தயாரிக்கலாம்.

(2) உரிய அரசாங்கம், இந்தச் சட்டத்தின் தொடக்கத்திலிருந்து பதினெட்டு மாதத்திற்குள், இந்தச் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட உரிமை எதனையும் பயன்படுத்த விரும்புகிற நபர் எவராலும் நியாயமான அளவிற்கு வேண்டுறுத்தப்படலாகும் தகவல் அடங்கிய வழிகாட்டுதல் ஏட்டினை எளிதாகப்புரிந்து கொள்ளக்கூடிய வடிவத்திலும் முறையிலும் அதன் அலுவலக மொழியில் தொகுக்கலாம்.

183
171

(3) உரிய அரசாங்கம், தேவைப்படுமாயின், (2) ஆம் உட்பிரிவில் சுட்டப்பட்ட வழிகாட்டு நெறிகளை முறையான கால இடைவெளிகளில் நாளது தேதிவரையிலான நிலைக்குக் கொணர்தலும் வெளியிடுதலும் வேண்டும்; குறிப்பாகவும், (2) ஆம் உட்பிரிவின் பொதுப்பாங்கிற்குக் குந்தகமின்றியும், அத்தகைய வழிகாட்டுதல் ஏடு பின்வருவனவற்றை உள்ளடக்குதல் வேண்டும்:—

(அ) இந்தச் சட்டத்தின் நோக்கங்கள்;

(ஆ). 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி அமர்த்தப்பட்ட பொது அதிகாரஅமைப்பு ஒவ்வொன்றினுடைய மையப் பொதுத் தகவல் அலுவலரின் அல்லது நேர்வுக்கேற்ப, மாநிலப் பொதுத் தகவல் அலுவலரின் அஞ்சல் மற்றும் தெரு முகவரிகள், தொலைபேசி மற்றும் தொலைநகலி எண் (Fax Number) மற்றும் கிடைக்கக்கூடியதாக இருப்பின், அஞ்சல் முகவரி;

(இ) மையப் பொதுத் தகவல் அலுவலருக்கு அல்லது, நேர்வுக்கேற்ப, மாநிலப் பொதுத் தகவல் அலுவலருக்கு அளிக்கப்படவேண்டிய தகவலைப் பெறுவதற்கான கோரிக்கை முறை மற்றும் படிவம்;

(ஈ) இந்தச் சட்டத்தின்படியான பொது அதிகாரஅமைப்பின் மையப் பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து அல்லது, நேர்வுக்கேற்ப, மாநிலப் பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து கிடைக்கக்கூடிய உதவி மற்றும் அவர்களின் கடமை;

(உ) மையத் தகவல் ஆணையத்திடமிருந்து அல்லது, நேர்வுக்கேற்ப, மாநிலத் தகவல் ஆணையத்திடமிருந்து கிடைக்கக்கூடிய உதவி;

(ஊ) ஆணையத்திற்கு மேல்முறையீடு செய்வதற்கான முறை உள்ளடங்கலாக, இந்தச் சட்டத்தால் வழங்கப்பட்ட அல்லது சுமத்தப்பட்ட உரிமை அல்லது கடமை பொறுத்த செயல் ஒன்று தொடர்பாக அல்லது செயலைச் செய்யாமை தொடர்பாகக் கிடைக்கக்கூடிய அனைத்து சட்டத்தீர்வழிகள்;

(எ). 4ஆம் பிரிவிற்கு இணங்க, பல்வகையான பதிவுருக்களைத் தம்மிச்சையாக வழங்குவதற்கான வகைமுறைகள்;

(ஏ) தகவலைப் பெறுவதற்கான கோரிக்கை தொடர்பாகச் செலுத்தப்படவேண்டிய கட்டணங்கள் பொறுத்த அறிவிப்புகள்; மற்றும்

(ஐ) இந்தச் சட்டத்திற்கு இணங்க, தகவல் பெறுவது தொடர்பாகச் செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட கூடுதல் ஒழுங்குமுறை விதிகள் அல்லது சுற்றறிக்கைகள்.

(4) உரிய அரசாங்கம், தேவைப்படுமாயின், முறையான கால இடைவெளிகளில் வழிகாட்டு நெறிகளை நாளதுதேதி வரையிலான நிலைக்குக் கொணர்ந்தும் வெளியிட்டும் தீரவேண்டும்.

*உரிய அரசாங்கத்தினால் விதிகள் செய்யப் படுவதற்கான அதிகாரம்.*

27. (1) உரிய அரசாங்கமானது, அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளை நிறைவேற்றுவதற்கான விதிகளைச் செய்யலாம்.

(2) குறிப்பாகவும், முன்சென்ற அதிகாரத்தின் பொதுப்பாங்கிற்குக் குந்தகமின்றியும் அத்தகைய விதிகள் பின்வரும் பொருட்பாடுகள் அனைத்திற்கும் அல்லது அவற்றுள் எதற்கும் வகை செய்யலாம், அவையாவன:—

(அ). 4 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின்படி பரப்பப்பட வேண்டிய தகவலுக்கான ஊடகக் கட்டணம் அல்லது மூலப்பொருள் அச்சடிப்பதற்கான அடக்கவிலைக் கட்டணம்;

(ஆ). 6 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி செலுத்தப்படத்தக்க கட்டணம்;

(இ). 7 ஆம் பிரிவின் (1), (5) ஆகிய உட்பிரிவுகளின்படி செலுத்தப்படத்தக்க கட்டணம்;

(ஈ). 13 ஆம் பிரிவின் (6) ஆம் உட்பிரிவின்படியும், 16 ஆம் பிரிவின் (6) ஆம் உட்பிரிவின்படியுமான அலுவலர்கள் மற்றும் பிற பணியாளர்களின் பணி வரையுரைகளும், வரைக்கட்டுகளும் மற்றும் அவர்களுக்கு வழங்கத்தக்க வரையூதியங்களும் படித்தொகைகளும்;

(உ). 19 ஆம் பிரிவின் (10) ஆம் உட்பிரிவின்படி மேல்முறையீடுகளை தீர்மானிக்கையில், மையத் தகவல் ஆணையத்தால் அல்லது, நேர்வுக்கேற்ப, மாநிலத் தகவல் ஆணையத்தால் ஏற்கப்பட்ட நடைமுறை ; மற்றும்

(ஊ) வகுத்துரைக்கப்படலாகிற அல்லது வகுத்துரைக்கப்படுமாறு கோரப்படுகிற வேறு பொருட்பாடு எதுவும்.

தகுதிறமுள்ள அதிகார அமைப்பினால் விதிகள் செய்யப்படுவதற்கான அதிகாரம்.

28. (1) தகுதிறமுள்ள அதிகாரஅமைப்பானது, அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக இந்தச் சட்டத்தின் வகைமுறைகளை நிறைவேற்றுவதற்கான விதிகளைச் செய்யலாம்.

(2) குறிப்பாகவும், முன்சென்ற அதிகாரத்தின் பொதுப்பாங்கிற்குக் குந்தகமின்றியும், அத்தகைய விதிகள் பின்வரும் பொருட்பாடுகள் அனைத்திற்கும் அல்லது அவற்றுள் எதற்கும் வகைசெய்யலாம்; அவையாவன,—

(i) 4 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின்படி பரப்பப்பட வேண்டிய செய்திகளை அச்சடிப்பதற்கான செலவுகள் அல்லது அந்தச் சாதனத்திற்கான செலவு;

(ii) 6 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி செலுத்தப்படத்தக்க கட்டணம்;

(iii) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி செலுத்தப்படத்தக்க கட்டணம்; மற்றும்

(iv) வகுத்துரைக்கப்படலாகிற அல்லது வகுத்துரைக்கப்படுமாறு கோரப்படுகிற வேறு பொருட்பாடு எதுவும்.

விதிகளை முன்வைத்தல்.

29. (1) இந்தப் பிரிவின்படி மைய அரசாங்கத்தால் செய்யப்படும் விதி ஒவ்வொன்றும், அது செய்யப்பட்ட பின்பு, கூடியவிரைவில், நாடாளுமன்ற அவை ஒவ்வொன்றின் முன்பும், அது ஒரு கூட்டத் தொடராகவோ அல்லது இரண்டு அல்லது அவற்றிற்கு மேற்பட்ட அடுத்தடுத்தக் கூட்டத் தொடர்களாகவோ மொத்தம் முப்பது நாட்களைக் கொண்ட ஒரு கால அளவிற்கு அது அமர்வில் இருக்கையில், அதன்முன் வைக்கப்படுதல் வேண்டும்; மற்றும், மேற்சொன்ன கூட்டத்தொடரினை அல்லது அடுத்தடுத்தக் கூட்டத் தொடர்களை உடனடியாகத் தொடர்ந்துவரும் கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முன்பு, அத்தகைய விதியில் மாற்றமைவு எதனையும் செய்வதற்கு இரண்டு அவைகளும் ஒத்துக்கொள்ளுமாயின், அல்லது அந்த விதி செய்யப்படுதல் ஆகாது என்பதை இரண்டு அவைகளும் ஒத்துக்கொள்ளுமாயின், அதன்பின்பு, அந்த விதி, அவ்வாறு மாற்றமைவு செய்யப்பட்ட வடிவத்தில் மட்டுமே செல்திறம் உடையது ஆகும் அல்லது, நேர்வுக்கேற்ப, செல்திறன் இல்லாது போகும்; எனினும் அத்தகைய மாற்றமைவு அல்லது அழித்தறவு எதுவும் அந்த விதியின்படி முன்னதாகச் செய்யப்பட்ட எதனின் செல்லுந்தன்மைக்கும் குந்தகமின்றி இருத்தல் வேண்டும்.

(2) இந்தச் சட்டத்தின்படி மாநில அரசாங்கம் ஒன்றினால் செய்யப்படும் விதி ஒவ்வொன்றும், அது அறிவிக்கை செய்யப்பட்டபின்பு, கூடியவிரைவில், மாநிலச் சட்டமன்றத்தின் முன்பு வைக்கப்படுதல் வேண்டும்.

இடர்ப்பாடுகளை அகற்றுவதற்கான அதிகாரம்.

30. (1) இந்தச் சட்டத்தின் வகைமுறைகளைச் செயற்படுத்துவதில் இடர்ப்பாடு எதுவும் எழுமாயின், மைய அரசாங்கமானது, அதிகாரமுறை அரசிதழில் வெளியிடும் ஆணை வாயிலாக, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரணாக இல்லாததும், அந்த இடர்ப்பாடுகளை களைவதற்காக தேவையானது அல்லது உகந்தது என அதற்குத் தோன்றுகிறதுமான வகைமுறைகளைச் செய்யலாம்:

173

***வரம்புரையாக:*** இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியில் இருந்து இரண்டு ஆண்டுக் காலம் கழிவுற்ற பின்பு, அத்தகைய ஆணை எதுவும் பிறப்பிக்கப்படுதல் ஆகாது.

*(2)* இந்தப் பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட ஒவ்வோர் ஆணையும், அது பிறப்பிக்கப்பட்ட பின்பு, கூடியவிரைவில், நாடாளுமன்றத்தின் ஒவ்வோர் அவையின் முன்பும் வைக்கப்படுதல் வேண்டும்.

2003. *31.* 2002 ஆம் ஆண்டு தகவல் பெறுவதற்கான சுதந்திரச் சட்டம், ஈங்கிதனால் நீக்கறவு செய்யப்படுகிறது. நீக்கறவு.

## முதலாம் இணைப்புப்பட்டியல்

### [13(3) மற்றும் 16(3) ஆகிய பிரிவுகளைக் காண்க]

### தலைமைத் தகவல் ஆணையர்/தகவல் ஆணையர்/மாநிலத் தலைமைத் தகவல் ஆணையர்/மாநிலத் தகவல் ஆணையர் இவர்களால் செய்யப்படும் ஆணைமொழி அல்லது உறுதிமொழி படிவம்.

.................................ஆகிய நான், தலைமைத் தகவல் ஆணையராக/தகவல் ஆணையராக/மாநிலத் தலைமைத் தகவல் ஆணையராக/ மாநிலத் தகவல் ஆணையராக அமர்த்தப்பெற்றுள்ள நிலையில் சட்டமுறையில் அமைவுற்ற இந்திய அரசமைப்பின்பால் உண்மையான நம்பிக்கையும், பற்றும் பூண்டிருப்பேன் என்றும், இந்தியாவின் இறையாண்மையையும் ஒருமைப்பாட்டையும் நிலைபெறச் செய்வேன் என்றும், அச்சம் கண்ணோட்டம் இன்றியும் விருப்பு வெறுப்பு இன்றியும், முறையாகவும் அகத்தூய்மையுடனும் என் முழு வினைத்திறனும் அறிவுத்திறனும் தேர்வுத்திறனும் கொண்டு என் பதவிக்குற்ற கடமைகளை ஆற்றி வருவேன் என்றும், நான் அரசமைப்பு முறையையும் சட்ட நெறிகளையும் நிலைபெறச் செய்வேன் என்றும் **கடவுளை முன்னிறுத்தி ஆணை மொழிகிறேன்.**
**உள்ளார்ந்து உறுதி மொழிகிறேன்.**

## இரண்டாம் இணைப்புப்பட்டியல்

### [24 ஆம் பிரிவைக் காண்க]

மைய அரசாங்கத்தினால் நிறுவப்பட்ட புலனாய்வு மற்றும் பாதுகாப்பு அமைப்பு:

1. புலனாய்வு தகவல் நிலையம்.
2. அமைச்சரவைச் செயலகத்தின், ஆய்வு மற்றும் பகுப்பாய்வுப் பிரிவு.
3. வருவாய்ப் புலனாய்வுத் துறை இயக்ககம்.
4. மையப் பொருளாதாரப் புலனாய்வு நிலையம்.
5. செயலாக்க இயக்ககம்.
6. மயக்க மருந்து கட்டுப்பாட்டு நிலையம்.
7. வான் பயண ஆய்வு மையம்.
8. சிறப்பு எல்லைக் காவல் படை.
9. எல்லைப் பாதுகாப்புப் படை.
10. மையச் சேமக் காவல் படை.
11. இந்தோ-திபெத்தியன் எல்லைக் காவல் படை.
12. மையத் தொழில் பாதுகாப்புப் படை.
13. தேசிய பாதுகாப்புக் காவலர்கள்.
14. அசாம் துப்பாக்கிப் படை.

15. ஆயுத எல்லைப் படை.
16. அந்தமான் மற்றும் நிக்கோபாரின் சிறப்புப் பிரிவு (சி.ஐ.டி.).
17. தாத்ரா மற்றும் நாகர்ஹவேலியின் சிறப்பு மற்றும் மையக் குற்றப் புலனாய்வுப் பிரிவு (C.I.D.-C.B.)
18. இலட்சத்தீவுகளின் சிறப்புக் காவல் பிரிவு.
19. சிறப்புப் பாதுகாப்புக் குழுமம்.
20. பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பு.
21. எல்லை சாலை வளர்ச்சி வாரியம்.
22. நிதிநிலை ஒற்றாடல் பிரிவு, இந்தியா.